உ

கணபதி துணை.

பாலபாடம்.

இரண்டாம்புத்தகம்.

முதற்பிரிவு.

நீதிவாக்கியங்கள்.

இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச்சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும்பயனையும் உனக்குப் போதிக்கும் அருள் வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால், அவரை ஒருகாலமும் மறவாதே.

ஈசுரபத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும், வருவிக்கும்.

நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும்பொழுது செய்யாதொழிவையாகில், பின் ஒருகாலத்தில் அது வாய்ப்பது அரிது.

சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.

தங்கள் நயத்தின்பொருட்டு மாத்திரம் அன்றி, பிறர் நயத்தின்பொருட்டும் பிரயாசப்படுகின்றவர்களே உத்தமர்.

எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும், முற்றறிவு உடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியாதிருந்தென்!

தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்; அவ்வற்ப இன்பமுமோ மிக இழிந்தது.

அறிவும் அதனால் ஆகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனாய் இரு.

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

நாம் செல்வத்தையும் உபசரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இழத்தல்கூடும்; நல்லொழுக்கத்தையோ அப்படி இழத்தல் கூடாது.

சுசியுடைமை சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும், மனசுக்கு இதத்தையும் வளர்விக்கும்.

நீ பிறர்க்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யுமுன், அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்துகொள்.

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றேயாயினும், தீதேயாயினும், அதுவே பெரும்பான்மையும் மரணபரியந்தம் அவனைத் தொடரும்.

நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள், முறையே பெரும்பான்மையும், நமது நற்சார்பு தீச்சார்புகளால், ஆகும்.

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும்போது, பிறர் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்வோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியாவண்ணம் தப்பிக்கொள்ளமாட்டோமே.

நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல்வேண்டும்; பயில்வோமாகில், மேலே பெருந்துன்பங்களையும் சகிக்க வல்லர் ஆவோம்.

உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.

மனத்திருத்தியிலும், சரீராரோக்கியத்திலும், நற்குண நற்செய்கைகளை உடையராய் வாழ்தலிலுமே அன்றி, திரவியத்திலே இன்பம் ஜனியாது.

வருவாய்க்குத் தக்க வாழ்க்கை இல்லாத பொழுது செல்வராவார் ஒருவரும் இலர்; அது உள்ள பொழுது வறியராவார் மிக அரியர்.

கடன்படும் செல்வர்களினும், கடன்படா வறியவர்களே மிகுந்த சுகம் உடையவர்கள்.

கோட்கேட்பவன் இல்லையாயின்; கோட்சொல்பவனும் இல்லை.

பிறருக்கு வரும் கல்வி செல்வங்களைக் காணும் பொழுது, பொறாமை இன்றி மகிழ்தலே நன்மனசுக்கு அழகு.

நாம் செய்த குற்றங்களை நாமே வெளிப்படுத்திப் பச்சாத்தாபப் படுவோமாயின், அறிவினால் மூத்த பெரியோர்கள் நம்மேல் இரங்கி, அவைகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து, அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சினேகிதர்கள்.

நம்மேல் அன்பு இல்லாதவர்கள் மேலும், நாம் அன்பு உள்ளவர்களாயே இருத்தல்வேண்டும்.

பிறர் உனக்குச் செய்த குற்றங்களினாலே உனக்குக் கோபம் தோன்றும் பொழுது, நீ பிறருக்குச் செய்த குற்றங்களை நினைப்பாயாகில், அது அடங்கி விடும்.

நம்முடைய செயல்கள் அனைத்தும் சுருதிக்கும் யுத்திக்கும் இசைந்திருக்கவேண்டும்.

பிறரிடத்திலே நமக்குக் குற்றம் என்று தோன்றுபவைகளே நம்மிடத்தில் நமக்குக் குற்றம் என்று தோன்றுமை பக்ஷபாதத்தினால் அன்றோ?

அறிவும் நல்லொழுக்கமும் உடையவர்களை நிந்திப்பவர்கள், அறிவையும் நல்லொழுக்கத்தையுமே நிந்திக்கிறார்கள்.

தரித்திரனாய் இருக்கும்போது திருத்தி அடையாதவன், செல்வனாயபோதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக்குற்றமே அன்றிப் பொருட்குற்றம் அன்று.

அதிக வருத்தத்தோடு உன்னைப் பெற்று வளர்த்த பிதாமாதாக்களை, நீ என்னவருத்தப்படினும், மறந்தும், கைவிடாமல், அன்போடு காப்பாற்று.

உன்னால் உன் தாய் தந்தையருக்குக் கிடைத்த உபசாரமே, அது கண்ட உன் பிள்ளைகளால் உனக்கும், கிடைக்கும்.

பிரயோசனம் இல்லாத சொற்களைச் சொல்லுவோன், அறிவாகிய உள்ளீடு இன்மையால் மனிதருக்குள்ளே பதர் என்று சொல்லப்படுவான்.

பாவம் செய்பவர்களை நன்குமதிப்பவர்கள் இல்லையாயில், பாவம்செய்பவர்களும் இலர்; ஆதலால் பாவம் செய்பவர்களினும், அவர்களை நன்குமதிப்பவர்களே பெரும்பாவிகள்.

பிறருடைய இன்சொற்கள் தனக்கு இன்பம் தருதலை அனுபவித்து அறிகின்றவன், அது நிற்க, கடுஞ்சொற்களைப் பிறரிடத்தே வழங்குவது என்ன பயன் குறித்து!

எவ்வகைப்பட்ட பெரிய நன்றிகளைக் கொன்றவனுக்கும் உய்வு உண்டாம்; செய்ந்நன்றியைக் கொன்றவனுக்கு உய்வு இல்லை.

பாவம் செய்ய ஏவுகின்றவன், செய்கின்றவனோடு, சமமாகத் தண்டிக்கப்படுவான்.

பகைவர், அயலோர், நட்பினர் என்னும் இம்மூவகையோரிடத்தும், தருமத்தின் வழுவாமல், ஒப்ப நிற்றல் நடுவுநிலைமை எனப்படும்.

பொய் கூறலாகிய பாவம் ஒன்றை ஒழிப்பின், அதுவே நெறியாக, மற்றப் பாவங்கள் அனைத்தும் தாமே ஒழிந்துவிடும்.

ஒரு பொய் சொன்னவன், அதைத் தாபிக்கப்புகின், ஒன்பது பொய் சொல்லல் வேண்டுமே.

காரணம் பற்றியாயினும், அறியாமையால் ஆயினும், ஒருவன் உன்னிடத்துத் தீங்கு செய்த போது, நீயும் அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்துக்கொள்.

திரவியம் எல்லார்க்கும் எந்நாளும் அவசியம் வேண்டுவதாய் இருக்கையால், அதனை விரைந்து சம்பாதிக்க வேண்டும்.

திரவியம் தேடுதற்கு முயற்சியே சிறந்த கருவி.

சரீரவருத்தத்துக்கு அஞ்சிப் பிறதொழில்களைச் செய்து பொருள் பெற்றும், உணவின்பொருட்டு வேளாளரிடத்துச் செல்லல்வேண்டுதலாலும், பொய் முதலிய பாவம் கலவாமையாலும், வேளாண்மைக்கு நிகராவது ஒன்றும் இல்லை.

செல்வம் முதலியவற்றினாலே செருக்கு அடைந்து, முன் உன்னோடு பயின்ற சினேகிதரை மறந்து விடாதே.

பாவத்துக்கு அஞ்சிப் பொருள் சம்பாதித்து,பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

பாவத்தால் வந்த பிறன் பொருளைப் பங்கிட்டு உண்பையாகில், தருமம் பொருளுடையானையும், பாவம் உன்னையும் அடைந்து, உன் சந்ததி நாசம் அடையும்.

பிறர் பொருளானது, உடல் உயிர் இரண்டிற்கும் ஊறு செய்தலால், உடல் ஒன்றிற்கே ஊறு செய்யும் விஷத்தினும், கொடிதாம்.

பிறர் பொருளைக் கவர்தற்குப் பலவகையால் வன்மை இருந்தும் அது செய்யாதவன் எவனோ, அவனே அவருக்கு அப்பொருள் அனைத்தையும் கொடுத்தவன் ஆவன்.

இரப்போருக்குப் பொருள் கொடுத்தவன், அக்கொடை தன் உயிரை விடாது மறுமையினும் தொடர்தலால், அப்பொருளை மாத்திரம் இழந்திலன்.

உண்ணும் வகை யறிந்து உண்ணுதலும், உண்டபின் நூறடி உலாவுதலும், பகலிலே நித்திரை செய்யாமையும், வாரந்தோறும் எண்ணெய் இட்டுத் தலைமுழுகுதலும் உளவாயின், உடம்பிலே நோய் உண்டாகாது.

நீ உன் உடம்பை வளர்த்தற்குப் பிறிதொன்றின் உடம்பை உண்பையாயின், எவ்வகையால் அருளை ஆளுவை?

உன் உள்ளத்திலே செல்வமிகுதியால் அகந்தை தோன்றுமாயின், உன்னின் மிக்காருடைய செல்வத்தையும், வறுமைமிகுதியால் துக்கந்தோன்றுமாயின், உன்னின் இழிந்தாருடைய வறுமையையும், நினை; நினைப்பாயாகில், அகந்தை துக்கங்கள் உன்னை எக்காலத்தும் அணுகாவாம்.

சூதாடலானது ஒன்றினை முன் பெற்று இன்னும் பெறுவேன் என்னும் கருத்தால் நூற்றினை இழந்து வறியன் ஆதற்கு ஏதுவாம்; ஆதலால், அதனை ஒருபொழுதும் நினைத்தலும் செய்யாதொழி.

சூதாடலை விரும்புவாய் ஆயின், காலமும் கருத்தும் பெறப்படாமையால், கல்வி, செல்வம், ஊண், உடை என்பன உன்னை அடையாவாம்.

நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவை மயக்கி, அது பயக்கும் ஒழுக்கத்தைக் கெடுத்தலால், கள்ளுண்டலே பாவத்துக்கெல்லாம் தலையாயது.

கண்டவிடத்து முகமாத்திரம் மலரும்படி சிநேகிப்பது சிநேகம் அன்று: அன்பால் உள்ளமும் மலரும்படி சிநேகிப்பதே சிநேகம் ஆம்.

நீ உன்னிலும் மெலியாரை வருத்தச் செல்லுமிடத்து, உன்னின் வலியவர் உன்னைவருத்த வரும்போது அவர் முன் அஞ்சி நிற்கும் உனது நிலையை நினை.

பிறிதோர் உயிர்க்கு வந்த நோயைத் தனக்கு வந்த நோய்போலக் குறிக்கொண்டு காப்பாற்றாவிடத்து, அறிவினாலே பயன் யாது!

நீ பிறனொருவனது பழியை அவன் புறத்திலே சொல்லுவையாயின், அவன் உன் பல பழிகளுள்ளும், நீ மிக வருந்தும்படி, அதிகமாகிய பழிகளை ஆராய்ந்து உன் எதிரே சொல்லுவான்.

ஒருவன் எவ்வெப்பொருளினின்றும் நீங்கினானோ, அவன் அவ்வப்பொருளினால் வரும் துன்பத்தை அனுபவித்தல் இலன்.

எந்த நாட்டையும் எந்த ஊரையும் உன் நாடும் உன் ஊரும் ஆக்குவது கல்வி; ஆதலால், அதனை இளமை தொடுத்து மரணபரியந்தம் விடாமற் கல்.

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன், நித்திரையை விட்டு எழுந்து, தந்தசுத்திசெய்து, கடவுளை வணங்கிக்கொண்டு, உன் பாடங்களைக் கற்பாயாயின், அவைகள் உன்மனசிலே நன்றாகப் பதியும்.

ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே, கல்விக்குச் சிறந்த கருவி.

அழிவு உள்ளதும் துக்கமயமுமாகிய உன் சரீரத்தைத் தம்பயன் கருதிப் பெற்று வளர்த்த உன் தாய் தந்தையரினும், அழிவு இல்லதும் இன்பமயமுமாகிய உன் அறிவை உன்பயன் கருதிப் பெற்று வளர்த்த உன் ஆசாரியரே, மேலானவர்.

நீ வருந்திக்கற்ற நூலை மறக்க விட்டு வேறு நூலைக் கற்றல், கையிலே கிடைத்த பொருளை எறிந்துவிட்டு வேறுபொருள் அரிப்பரித்துத் தேடல் போலும்.

சபைக்கு அஞ்சி நடுங்கும் வித்துவான்களிடத்தில் கல்வியும், சபைக்கு அஞ்சாத மூடர்களிடத்தில் ஆரவாரச்சொற்களும், உண்டாதலினும் உண்டாகாமையே நன்று.

உன்னை யாவரும் வியக்கக் கருதி நீயே உன்னைப் புகழ்தல், விளக்கைப் பிரகாசிப்பிக்கக் கருதி அதனது தகழியில் நீரை வார்த்தல் போலும்.

செல்வம் கல்லாதவரைக்கெடுக்கையாலும்,வறுமை கற்றோரைக் கெடாமையாலும், கல்லாதாரிடத்து உண்டாகிய செல்வம், கற்றவரிடத்து உண்டாகிய வறுமையினும், மிகத் துன்பஞ் செய்வதாம்.

செல்வம் உள்ள மூடரினும், வறுமை உள்ள வித்துவான்களே எங்கும் நன்குமதிக்கப்படுவர்கள்.

செல்வம் அழிவு உள்ளது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவுள்ளது: கல்வி அழிவில்லாதது ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவில்லாதது.

உடம்போடு அழிதலால் பயன்படாச்சாதியுயர்ச்சி இலராயினும், உயிரோடு செல்லுதலாற் பயன்படும் கல்வியுயர்ச்சி உடையரே மேன்மக்கள்.

கல்வியறிவால் ஆகிய மூப்பே மூப்பு; ஆதலால், அதனை உடையவர்களே யாவராலும் வணங்கப்படத்தக்கவர்கள்.

அநித்தியமும் சடமுமாகிய உன் சரீரத்தின் பிதா மாதாக்களுடைய சொல் நித்தியமும் சித்துமாகிய உன் ஆன்மாவின் பரமபிதா மாதாவாகிய கடவுளது சொல்லாகிய வேதாகமங்களுக்கு விரோதம் இல்லா வழி அமைந்து நட.

அருட்செல்வமே அறிவுடையோரிடத்துமாத்திரம் உளதாகி, எவ்வுயிர்களாலும் நன்குமதிக்கப்படும் பெருஞ்செல்வம்.

நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும்; உன் உயிர்க்குப் பயன் படுவனவற்றைச் செய்யாது, வீண் நாட்கழிப்பது, ஐயையோ, எவ்வளவு அறியாமை!

நாவை அடக்கி விக்கல் எழும் போது, ஒன்றைச் செய்தலே அன்றிச் சொல்லலும் கூடாமையாலும்,

அது இன்ன காலத்தில் வரும் என்று அறிதல் இயலாமையினாலும், மோக்ஷத்திற்கு ஏதுவாகிய புண்ணியத்தை விரைந்து செய்.

நாம் சிற்றறிவு சிறுதொழில் உடையேம் ஆதலால், முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவ புண்ணியங்களை உள்ளபடி அறிதலும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும், நம்மால் இயலாவாம்.

ஆக நீதிவாக்கியங்கள்—அஉ.

கதைகள்.

௧. எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்நியாசி ஒரு ஏரிகரைமேலே போனார். போகும்போது ஒரு செம்படவன் அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சந்நியாசி செம்படவனைப்பார்த்து "ஐயோ! நீ எப்போது கரை ஏறுவாய்" என்றார். "ஐயா, என் பறி நிரம்பினால் கரை ஏறுவேன்" என்றான்.

௨. இரண்டு மல்லசெட்டிகள் ஒருவரோடொருவர் மல்லயுத்தம் பண்ணினார்கள். ஒருவன் மற்றவனைக் குப்புறத் தள்ளி, புரட்டிப்புரட்டி உதைத்தான். உதையுண்ட வீரன் எழுந்து நின்று, சனங்களைப் பார்த்து "ஆனால் என்ன! என் மீசையிலே மண்படவில்லை" என்று மீசையை முறுக்கினான்.

ங. ஒரு மனிதன் ஒரு மாகாராசனைப் பார்த்து "நீர் எனக்கு ஆறுமாசம் நல்லபோசனம் தருவீராகில்பின் ஒரு பெரிய மலையை எடுப்பேன்" என்றான். அவன் இவனுக்கு அப்படியே நல்ல ஆகாரம் கொடுத்தான். பின் மலைக்குச் சமீபத்திலே அழைத்துக்கொண்டு போய் "இதை எடு" என்றான். அவன் "நீங்கள் எல்லாரும் எடுத்து என்தலைமேலே வைத்தால் எடுக்கிறேன்" என்று சொன்னான்.

ச. செலவுகாரனாகிய ஒரு உத்தியோகஸ்தன் ஒரு செல்வனைக் கடன்கேட்டான். "திரும்ப நீ எப்படிக் கடன் தீர்ப்பாய்" என்றான். "என் சம்பளத்திலே மாசந்தோறும் சேர்த்துத் தருவேன்" என்றான். இதற்குமுன்னே தானே நீ இப்படிச் சேர்த்துக்கொள்ளலாகாதா" என்றான். "தெரியாமல் இருந்துவிட்டேன்" என்றான். "ஆனால், நான் தெரிவிக்கிறேன்: எப்படியெனில் கடன் தரமாட்டேன்; போ" என்றான். பின் பணஞ் சேர்க்கத் தொடங்கினான்.

ரு. ஒரு குரு தம்முடைய சிஷனுக்கு ஞானங்கள் உபதேசித்தார். உபதேசிக்கும்போது, சிஷன் தன்வளையிலே நுழையப் போகும் எலியைப்பார்த்து, அதன்மேலே நினைப்பாக இருந்தான். குரு உபதேசித்தவுடனே "சிஷா, எல்லாம் நுழைந்ததா" என்றார். சிஷன் "எல்லாம் நுழைந்தது, வால் மாத்திரந்தான் நுழையவில்லை" என்றான்.—மூடர்களுக்குச் சொல்லுகிற புத்தி இப்படியே இருக்கும்.

௬. ஓராசாரியன் சிஷன் வீட்டுக்குப் போய், சில வார்த்தைகள் பேசிக்கொண்டு இருக்கும்பொழுது, "சிஷா, உன் பிள்ளைகள் நால்வருள் யோக்கியன் யாவன்" என்றான். "சுவாமி, இங்கே கூரைவீட்டின் மேல் ஏறிக்கொண்டு கொள்ளிக்கட்டை சுழற்றுகிறானே! இவன் தான் இருக்கிறவர்களுக்குள்ளே பரம யோக்கியன்" என்றான். குரு "மற்றை மூவர்கள் எப்படிப்பட்டவர்களோ" என்று, மூக்கின்மேலே விரல் வைத்து, பெருமூச்சுவிட்டு; "அப்படியா" என்று விசனப்பட்டான்.

௭. ஒரு செல்வன் தன்பிதாவுக்கு ஓட்டிலே கஞ்சி வார்த்துக்கொண்டு வந்தான். அவன் பிள்ளை அதைப் பார்த்து, அந்த ஓட்டை எடுத்து ஒளித்துப்போட்டான். பின் அந்தச்செல்வன் தன் பிதாவைப்பார்த்து, "ஓடு எங்கே" என்று கேட்டு அடித்தான். அப்பொழுது அந்தப்பிள்ளை "அப்பா, என் பாட்டனை அடியாதே; நானே அந்த ஓட்டை எடுத்து ஒளித்து வைத்தேன்; ஏன் என்றால், நான் பெரியவன் ஆன பின், உனக்கு வேறே ஓடு சம்பாதிக்கமாட்டேன்" என்றான். அதைக் கேட்டு, செல்வன் வெட்கப்பட்டு அன்றுமுதல் தன்பிதாவை மிகுந்த சௌக்கியமாக வைத்திருந்தான்.

௮. ஒரு பாடகன் தெருத்திண்ணையிலே இருந்து தலையசைத்துக்கொண்டு சங்கீதம் பாடினான். வெகுசனங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. அப்பொழுதுவழி

யிலே போகிற ஒரு ஆட்டிடையன் அங்கே நின்று, சற்றுநேரம் பார்த்து, தேம்பித் தேம்பி ஓயாமல் அழு தான். இருந்தவர்கள் ஆனந்தத்தாலே அழுகிறான் என்று எண்ணி, "ஏன் அழுகிறாய் அழாதே" என்றா ர்கள். இடையன் "ஐயோ! என்மந்தையிலே ஒரு ஆடு இந்தவலியே வரப்பெற்று, கோணைக் கோணை இழு த்து, யாதொன்றினாலும் பிழையாமல் இறந்துபோயி ற்று; அது இந்தப் பிள்ளைக்கும் வந்ததே என்று அழு கிறேன்; ஆனால், இவனுக்கு உடனே சூடுபோட்டால் ஒருவேளை பிழைப்பான்" என்றான். அவர்கள் அவ னுடைய அறியாமையைக்கண்டு நகைத்து, அவனைத் திட்டித் துரத்தினார்கள்.

௬. ஒருவன் பதினாயிரம் வராகன் வைத்திருந் தான். அவன் தனக்கு மரணகாலம் சமீபித்ததை அறிந்து, தன் இரண்டு பிள்ளைகளையும் அழைத்து, ஒவ்வொருவனுக்கு ஐவைந்து பணம் கொடுத்து, "இதனாலே வீட்டைநிறையப் பண்ணுகிறவனுக்கு என்பொருளைக் கொடுப்பேன்" என்றான். அவர்க ளுள் மூத்தவன் ஐந்துபணத்துக்கும் மலிந்த பண்ட மாகிய கருப்பஞ்செத்தை வாங்கி வந்து, வீடு நிறை யக் கொட்டிப் பரப்பிவைத்தான். இளையவன் மெழு குவர்த்தி வாங்கிவந்து, ஏற்றி எங்கும் பிரகாசிக்க வைத்தான். பிதா அவ்விரண்டையும் பார்த்து, தீபம் ஏற்றினவனுக்கே பொருளை ஒப்பித்தான்.—புத்தியுள் ளவனே பெரியவன்.

க0. ஒருவன் கடைவீதியிலே இராமாயணப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்போது ஒரு இடைச்சி மூடனாகிய தன் கணவனுக்குப் புத்தி வருமென்று எண்ணி, அவனைப்பார்த்து, "நீர் இராமாயணம் கேட்டுவாரும்" என்று அனுப்பினாள். அவன் அப்படியே வந்து, மோவாயிலே கோலை ஊன்றி, குனிந்துகொண்டு நின்றான். அங்கே இருந்தவர்களில் ஒரு துட்டன் அவன் முதுகின்மேல் ஏறிக்கொண்டான். அந்த இடையன் பிரசங்கம் முடியுமளவும் அப்படியே சுமந்துகொண்டு நின்று, பின் வீட்டுக்குப்போனான். அவன் மனைவி அவனைப்பார்த்து, "இராமாயணம் எப்படி இருந்தது" என்றாள். "அது இலகு அன்று; ஒரு ஆட்சுமை இருந்தது" என்றான். அவள் அதை ஆராய்ந்து அறிந்து, அவன் மடமைக்கு விசனப்பட்டாள்.

கக. ஒருத்தி அழகும் விவேகமும் உள்ள ஒருவனை விவாகஞ் செய்யவேண்டும் என்று வெகுநாள் காத்திருந்தாள். ஒருநாள் அழகுள்ள புருஷன் ஒருவன் வந்தான். அவன் விவேகியோ என்று அறியும்பொருட்டு அவனோடு பேசிக்கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கே சடசட என்றது. அவன் "அது என்ன" என்றான். "அது உடும்பு" என்றாள். "அதில் ஓரிறகு பிடுங்கிவா; காது குடைதல்வேண்டும்" என்றான். "உடும்புக்கு இறகு இருக்குமா! போ" என்று அவனை அனுப்பிவிட்டாள். சிலநாள் சென்றபின், வேறொருவன் வந்தான். அவனுடனே, "முன் ஒரு மூடன் உடும்பி

லே இறகு பிடுங்கிவரச்சொன்னான்" என்றாள். அதற்கு அவன் சிரித்து, "அவன் ஆமை என்று நினைத்தான்போலும்" என்றான். இவன் அவனிலும் பெருமூடன் என்று எண்ணி, இவனையும் இகழ்ந்து போகச்சொன்னாள்.

கஉ. ஒரு பிறவிக்குருடனுக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப்பிள்ளை ஒருநாள் பால்புரைக்கேறி இறந்துபோயிற்று. பந்துக்கள் அந்தக் குருடன் சமீபத்திலவந்து, "உன் பிள்ளை இறந்துபோயிற்று" என்றார்கள். "எப்படி இறந்தது" என்றான். "பால் குடிக்கையில் இறந்தது" என்றார்கள். "பால் எப்படி இருக்கும்" என்றான். "வெள்ளையாயிருக்கும்" என்றார்கள். "வெள்ளை எப்படி இருக்கும்" என்றான். "கொக்குப் போலிருக்கும்" என்றார்கள். "கொக்கு எப்படி இருக்கும்" என்றான். கையைக் கோணலாக வளைத்துப் "பார்" என்றார்கள். அவன் தடவி, நீண்டு வளைந்து கோணலாக இருப்பதை அறிந்து, "ஐயோ! இந்த முரட்டுப்பால் குழந்தைவாயில் நுழைந்தால் சாவாமல் பிழைக்குமா" என்று அலறி அழுதான்.—ஒருபொருளை அறியும் அறிவில்லாதவர்களுக்குச் சொல்லுவது இப்படியே விபரீதம் ஆகும்.

கங. விடியற்காலத்திலே நித்திரைவிட்டெழுந்திருக்கும்போது முன்னே சோட்டுக் காகங்களைப் பார்த்தவனுக்கு அன்றைக்கு நல்ல லாபம் உண்டாகும் என்று ஒருவன் கேள்விப்பட்டு, தன் வேலைக்காரனை அழைத்து, "நீ விடியற்காலத்திலே சோட்டுக் காகத்

தைப்பார்த்து வந்து என்னை எழுப்பு" என்றான். வேலைக்காரன் அப்படியே சோட்டுக்காகம் இருக்கக் கண்டுவந்து, யசமானனை எழுப்பினான். யசமானன் எழுந்துபோய்ப் பார்க்கும்போது, ஒருகாகம் ஓடிப்போய்விட மற்றக் காகம் இருந்தது. அப்போது எசமானன் "ஒன்றுபோவதற்கு முன்னே தானே என்னை எழுப்பாமற்போனாய்" என்று கோபித்துக்கொண்டு, வேலைக்காரனை அடித்து உதைத்தான். அப்போது வேலைக்காரன் "ஐயா, இரண்டு காகத்தையும் பார்த்த எனக்குவந்த இந்த லாபத்தை நீர் பார்க்க இல்லையா" என்றான். அதுகேட்டு யசமானன் வெட்கப்பட்டான்.

கக. பணத்திலே ஆசையில்லாத ஒரு சந்நியாசி காட்டுவழியே செல்லும்பொழுது, அங்கே ஒரு பணப்புதையலைக் கண்டு, பயந்து ஓடினான். அப்போது எதிராக ஒரு வேலைக்காரனோடு வந்த சந்நியாச வேஷதாரிகள் இருவர் அவனைப் பார்த்து, "நீ ஏன் ஓடுகிறாய்" என்றார்கள். "அங்கே இருக்கிற ஆட்கொல்லியைக்கண்டு பயந்து ஓடுகிறேன்" என்றான். அவர்கள் இருவரும் "இவன் பணத்தையே ஆட்கொல்லி என்று சொல்லுகிறான், மூடன்" என்று நினைத்து, அங்கே போய், அந்தப்பணத்தை எடுத்துக்கொண்டு போனார்கள். அவர்களுடைய வேலைக்காரன், அவர்களைக் கொன்றுபோட்டால் அந்தப்பணத்தைத் தான் எடுத்துக்கொள்ளலாம் என்று நினைத்து, அவர்களுக்குச் சமைக்கும் சோற்றை நஞ்சு கலந்து சமைத்து வைத்

தான். அவர்கள் இருவரும், வேலைக்காரன் ஒருவேளை தங்களைப் பங்கு கேட்பான் என்று நினைத்து, குளத்திலே குளிக்கும்போது அவனைத் தண்ணீரிலே அமிழ்த்திக் கொன்றுவிட்டு வந்து, அவன் சமைத்த சோற்றைத் தின்று, தாங்களும் இறந்து, ஆட்கொல்லி என்கிற வார்த்தையை நிசமாக்கினார்கள்.

கரு. ஒரு மூடன் ஒரு செட்டியுடனே கூடிக்கொண்டு பயணம் பண்ணினான். பண்ணும்போது, இரவிலே மிக இருளானபடியினாலே இவன் ஒரு மைதானத்திலே வழியிலே படுத்துக்கொண்டான். செட்டி சமீபத்திலே ஒரு செடிமறைவிலே படுத்துக்கொண்டான். அப்பொழுது வழியிலே போகிற திருடர்காலிலே மூடன்கால் தட்டுப்பட்டது. ஒரு திருடன் "இது என்ன! கட்டைபோல் இருக்கிறது" என்றான். மூடன் கோபங்கொண்டு "போ போ, உன்வீட்டுக்கட்டை இடுப்பிலே ஐந்துபணம் முடிந்துகொண்டு நன்றாகப் படுத்திருக்குமா" என்றான். திருடர் அவனைப்பிடித்து, அந்தப்பணத்தைப் பிடுங்கிக்கொண்டு போனார்கள். போம்போது, "இந்தப்பணம் செல்லுமோ செல்லாதோ" என்று பேசிக்கொண்டார்கள். மூடன் அதைக்கேட்டு, "ஆ என்பணம் அப்படிப்பட்டதா? வேண்டுமாகில், செல்லுமோ செல்லாதோ என்று அறியும்பொருட்டு, இங்கே செட்டியார் இருக்கிறார், காட்டுங்கள்" என்று அந்தச்செட்டியைச் சுட்டிக்காட்டிச் சொன்னான். அவர்கள் செட்டியிடத்

இல் இருந்த நூறுவராகனையும் பறித்துக்கொண்டு போனார்கள்.—மூடர்கள் சேர்க்கையினாலே தப்பாமல் கேடு வரும்.

கசு. ஒரு ஊரிலே ஒரு பார்ப்பான் இறைச்சி தின்று கள்ளுக் குடித்து வெறி கொண்டு திரிபவனாயிருந்தான். கல்வியறிவு உள்ள ஒரு சூத்திரன் அவன்மேல் இரங்கி, அவனைப் பார்த்து, "ஐயா, நீர் கடவுள் அருளிய வேதாகமங்களுக்கு மாறாக இறைச்சி தின்று கள்ளுக் குடிக்கிறீரே; இதனால் உமக்கு மறுமையிலே நரகத் துன்பம் கிடைப்பதேயன்றி, இம்மையிலே எவர்களாலும் அவமதிப்பும் வரும். ஐயையோ! என் கெட்டுப்போகிறீர்! உம்மிடத்திலே ஒழுக்கமில்லாதபோது பிராமணத்துவம் எங்கே" என்றான். பார்ப்பான் கோபங்கொண்டு, "நான் அப்படிச் செய்வதை அறிந்திருந்தும், அப்படிச் செய்யாத பிராமணர்களும் என்னையே நன்குமதிக்கின்றார்கள். எல்லாரும் அந்தப் பிராமணர்களைப்பார்க்கிலும் என்னையே பெரியவர் எனக்கொண்டு, எனக்கே முதல் தானம் தருகிறார்கள்; என்னைப் பிராமணன் அல்லன் என்று இன்றைக்கு நீயே சொல்லக்கேட்டேன். உன் வீட்டுக்கு அரிசிக்கு வராமற் பார்த்துக்கொள்; போ போ பைத்தியகாரா" என்றான். வித்துவான் பெருமூச்சுவிட்டு ஆலோசனையுடன் தலை குனிந்துகொண்டு போனான். பார்ப்பான் தன்னோடு நின்ற மூடனாகிய ஒரு செல்வனைப்பார்த்து, "தம்பீ, இவன் வெட்கித்துப்போனான்;

பார்த்தீரா?" என்றான். பணக்காரன் "ஆஆ! சந்தேகம் என்ன சுவாமீ!" என்றான்.

கஎ. ஒருநாள் ஒரு நரி இரைக்காகத் திரியும்போது, நல்ல திராட்சைப்பழக்கொத்து ஒன்று எதிர்ப்பட்டது. அதைப் பறிக்கும்படி அந்த நரி வேண்டியமட்டும் குதித்தும் எட்டவில்லை. அப்போது அது 'சீ புளிக்குமே' என்று சொல்லிப் போய்விட்டது.

கஅ. ஒரு பள்ளிக்கூடத்தில் ஒரு பிள்ளை மற்றொருவனை நோக்கி, "சினேகிதனே, நீ கடவுள் இருக்கிற இடத்தைச் சொல்வாயாகில், உனக்கு ஒரு மாம்பழம் தருவேன்" என்றான். அதற்கு அவன் "தோழா, நீ கடவுள் இல்லாத இடத்தைச் சொல்வாயாகில், உனக்கு இரண்டு பழம் தருவேன்" என்றான். இவர்களிற் பின் கேட்டவன் புத்தி பெரியது.

கக. சம்பத்து உடையவனாகிய ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் தன் பல்லக்குச் சுமக்கிற ஆட்களை அழைத்து, "பசுமாட்டுக்கு நாள்தோறும் புல்லு வெட்டிக் கொண்டுவந்து போடுங்கள்" என்றான். அதற்கு அவர்கள் "நாங்கள் பல்லக்குமாத்திரம் சுமப்போம், வேறுவேலை செய்யமாட்டோம்" என்றார்கள். இப்படி இருக்கும்பொழுது, ஒருநாள் பசுவின் கன்று வெளியில் ஓடிப்போயிற்று. அப்பொழுது வர்த்தகன் அந்தச் சிவிகையாட்களைப் பார்த்து, "கன்றைத் தேடிப் பிடித்துக்கொண்டு வாருங்கள்" என்று சொல்ல அவர்கள், "நாங்கள் பல்லக்குச் சுமக்கிறவர்களோ, மாடு

மேய்க்கிறவர்களோ" என்றார்கள். அப்போது வர்த்
தகன் அவர்களுக்குப் புத்தி வரும்படி செய்யவேண்டு
மென்று யோசித்து, மத்தியானவேளையிலே பல்லக்
குக் கொண்டுவரச் சொல்லி, அதிலே தான் ஏறி, கன்
றைத் தேடும்படி நெரிஞ்சின்முள் இருக்கிற காட்டுமா
ர்க்கமாய்ப்போகச் சொன்னான். அவர்கள் அப்படியே
போய்த் திரிந்து வருந்துகையில், வர்த்தகனிடத்தில்
முறையிட்டார்கள். அதற்கு அவன் "பல்லக்குச் சும
க்கிறது உங்கள் கடமை, கன்றைத் தேடுகிறது என்
கடமை" என்று சொல்லி, அவர்கள் பல்லக்கை இற
க்காமற் சுமக்கும்படி செய்தான். அன்றுமுதல் அவ
ர்கள் நல்லபுத்தி அடைந்து, யசமானன் ஏவும் எந்தக்
காரியத்தையும் செய்வது கடமையென்று ஒப்புக்
கொண்டார்கள்.

௨௦. ஒரு தேசத்தில் ஒருகிழவன் இருந்தான். அவ
னுக்கு அநேக பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் ஒரு
வரோடு ஒருவர் ஒருமையின்றி நாள்தோறும் சண்டை
செய்துகொண்டிருப்பதைத் தகப்பனவன் கண்டு,
தன்னாற் கூடியவரையில் அவர்களுக்குத் தக்கபுத்தி
களை அடிக்கடி சொல்லிவந்தும், அவர்கள் கேளாமற்
போனார்கள். இப்படியிருக்க, அவன் தனக்குள் ஒரு
யுக்தி செய்துகொண்டு, தன் பிள்ளைகள் யாவரையும்
அழைத்து, எதிரே நிறுத்தி, குட்டையாயிருந்த ஒரு விற
குகட்டைக் கொண்டுவந்து, அவர்கள் முன் வைத்து,
"பிள்ளைகளே, நீங்கள் எப்படியாவது பிரயாசப்பட்டு

ஒவ்வொருவனாக இந்த விறகுகட்டை முறியுங்கள். பார்ப்போம்'' என்றான். அவர்கள் தகப்பன் சொற்படி தனித்தனியே தங்களால் ஆனமட்டும் பிரயாசப்பட்டும் முறிக்கமாட்டாமற் போனார்கள். உடனே கிழவன் அவ்விறகுகட்டை அவிழ்க்கச் சொல்லி, ஒவ்வொருவன் கையில் ஒவ்வொன்றாகக் கொடுத்து, "இப்பொழுது முறியுங்கள்'' என்று சொல்ல அவர்கள் மிக எளிதாக முறித்துப்போட்டார்கள். அப்பொழுது தகப்பன் தன் புத்திரரைப்பார்த்து, "பிள்ளைகளே, இவ்விறகுகட்டு ஒன்றாயிருந்தபொழுது, உங்களால் எவ்வளவும் முறிக்கக்கூடாமற்போயிற்று. கட்டவிழ்த்துத் தனித்தனியே பிரித்தபொழுதோ, மிக எளிதாக முறித்துப் போட்டீர்களே; இதினாலேதான் நீங்கள் உங்களுக்குள் எள்ளளவும் பேதமின்றி ஒருமித்திருப்பதினால் உண்டாகும் பலன் இத்தன்மையதென்று எளிதாகத் தெரிந்துகொள்ளலாம்; ஆதலால், இனி நீங்கள் ஒருவரோடு ஒருவர் சண்டைபோடாமல், பாலும் நீரும்போல் ஐக்கமாக இருக்கவேண்டும். அவ்வாறு இருப்பீர்களானால், ஒருவரும் உங்களை மோசஞ்செய்து வெல்லமாட்டார்கள்'' என்றான். அதுமுதல் அந்தப்பிள்ளைகள் தங்கள் தகப்பனாற் காட்டப்பட்ட திர்ஷ்டாந்தத்தை ஒருபொழுதும் மறவாமல், ஒருமையை அநுசரித்துக்கொண்டு வந்து சுகப்பட்டார்கள்: ஆதலால், பிள்ளைகளே, நீங்களும் எப்பொழுதும் சகோதர ஒருமையை அநுசரித்து நடக்கவேண்டும்.

உக. ஒருநாள் இரவு மூடனாகிய ஒரு திருடன் ஒரு பிரபுவின் வீட்டிலே நுழைந்து சில சாமான்களைத் திருடிக்கொண்டு, வெளியே புறப்பட்டுப் போனான். அதைப் பிரபு தற்செயலாய் வெளியிலே வரும்பொழுது கண்டு, அவனை இன்னான் என்று அறிந்து, கூச்சலிட்டுத் துரத்திக்கொண்டு பிடிக்கும்படி ஓடினான். திருடன் களவெடுத்த பொருள்களிற் சிலவற்றை வழியில் எறிந்துவிட்டு, மிகுந்த வேகமாக ஓடி அந்தப் பிரபுவுக்குத் தப்பி மறைந்து விட்டான்.

பிரபு மறுநாட்காலையில் அவன் எறிந்த பொருள்களை எடுப்பித்துக்கொண்டு போய் நியாயாதிபதியினிடத்திலே காட்டி, "இன்னபெயருடைய திருடன் என் வீட்டிலே நேற்றிரவு புகுந்து களவெடுத்தான்" என்று முறைப்பாடுசெய்தான். நியாயாதிபதி பிரதிவாதியாகிய கள்ளனை அழைத்து வழக்கை விசாரித்தார் கள்ளன் "நான் அந்த இடத்துக்குப் போகவேயில்லை" என்று மறுத்துவிட்டான். அப்பொழுது பிரபுவுக்காகச் சாட்சி சொல்லும்படி சாட்சிக் கூடத்தில் ஏறிய பிரபுவினுடைய வேலைக்காரன் ஒருவன், "இவன் இன்ன நேரத்திலே என்னுடைய எசமானன் வீட்டிற் களவெடுத்துக்கொண்டு ஓடும்பொழுது, நான் பார்த்தேன்" என்றான்.

உடனே, அந்தக்கள்ளன் சாட்சிக்காரனைச் சினந்து ஏறிட்டுப்பார்த்து, நியாயாதிபதியை நோக்கி "ஐயா, இவனை நான் அந்த இடத்திலே காணவில்லை" என்றான்.

நியாயாதிபதி அக்கள்வனை அவன்வாக்கினாலே "இவன்திருடன்" என்று தீர்மானித்து அவனுக்குக் கடுந் தண்டம் விதித்தார்.

பூமி.

நாம் வாசஞ்செய்கின்ற பூமி மிகவும் பெரியதாயும், அளவிறந்த பொருள்களை உடையதாயும் இருக்கின்றது. இதிற் சிலபாகம் நீரும் சிலபாகம் நிலமுமாய் இருக்கின்றன. நிலத்தில், உயர்ந்த மலைகளும், மண் மேடுகளும், தாழ்ந்த பள்ளங்களும், சமநிலங்களும் இருக்கின்றன.

நிலத்திலே பலவிதமான மரங்களும், கொடிகளும், புல்பூண்டுகளும் உண்டாகும். இவைகள் செழித்து வளர்வதினாலேதான் பூமி மிகவும் சிறப்புள்ளதாகத் தோன்றுகின்றது. நிலம் மனிதர்களுடைய தொழின் முயற்சிக்குத் தக்கபடி பலன்தரும். பூமியில் உள்ள சிருட்டிபேதங்கள் அளவில்லாதவைகளாயும், ஆச்சரியப்படத்தக்கவைகளாயும் இருக்கின்றன.

உவர்நீர் ஒன்றாகச்சேர்ந்து பரந்து, நிலத்தைச் சூழ்ந்திருக்கின்றது. இப்படிச் சேர்ந்த உப்புநீர்ப்பரவை சமுத்திரம் என்று சொல்லப்படும். சமுத்திரத்திலே, மீன் முதலாகிய நீர்வாழ் பிராணிகளும், முத்து பவளம் என்னும் இரத்தினங்களும் உண்டாகும். அதில் மனிதர்கள் கப்பலேறிச் சஞ்சரிக்கின்றார்கள்.

சமுத்திரசலத்தை மனிதர்கள் குடிக்கிறதில்லை. அதன் அருகில் தோண்டினால், குடிக்கத்தக்க நல்ல

சலம் ஊறும். மனிதர்களுக்கு மிகவும் உபயோகப் படுகிற உப்பு, சமுத்திரசலத்தால் விளையும். குடிப்பதற்கும் ஸ்நானஞ்செய்வதற்கும் தகுதியான நல்லசலம் ஆறு குளம் கிணறு என்னும் இவைகளில் உண்டு.

மிருகம்.

மிருகங்களாவன சிங்கம், புலி, யானை, ஒட்டகம், கரடி, குதிரை, மாடு, ஆடு, எருமை, மான் முதலானவைகளாம். மிருகங்களில் சில துட்டகுணம் உள்ளவை. சில சாந்தகுணம் உள்ளவை. பிற பிராணிகளைக்கொன்று தின்கின்ற சிங்கம் புலி முதலிய மிருகங்கள் துட்டகுணம் உள்ளவை. புல் தழை முதலிய தாவர உணவுகளை உண்கின்ற மான் மாடு முதலிய மிருகங்கள் சாந்தகுணம் உள்ளவை.

யானை குதிரை முதலிய சில மிருகங்கள் துட்டத்தன்மை உள்ளவைகளாய் இருந்தபோதிலும், மனிதர் கைப்பட்டுப் பழகிவருதலாற் சாந்தகுணம் உள்ளவைகளாய், மனிதர்களுக்கான அநேக வேலைகளைச் செய்கின்றன.

மிருகங்கள் காடுகளிலும், நாடுகளிலும் இருக்கின்றன. நாய், நரி, பூனை, குரங்கு, முயல், அணில், ஓந்தி முதலான சிறுமிருகங்கள் காட்டிலும் நாட்டிலும் வாசஞ்செய்கின்றன. மிருகங்களுக்கு விலங்குகள் என்றும் பெயர்.

மிருகங்கள் எல்லாம் நான்கு காலும் ஒருவாலும் உடையனவைகளாயிருக்கும். இவைகளிற்சிலவற்றிற்குக்

கொம்பு உண்டு. சிலவற்றிற்குக் கொம்பு இல்லை. சில மிருகசாதிகளில் ஆண்மிருகத்திற்குக் கொம்பு உண்டு. பெண் மிருகத்திற்குக் கொம்பு இல்லை. விலங்குகளின் கொம்புகள் அநேக வேலைகளுக்கு உதவுகின்றன.

காட்டு மிருகங்களாகிய மான் முதலியவைகளை இராசாக்களும் செல்வர்களும் தங்கள் வீடுகளிற் கொண்டுவந்து, வளர்க்கிறார்கள். நாற்கால் விலங்குகளுள், யானை, ஒட்டகம், குதிரை, மாடு, ஆடு, எருமை என்னும் இவைகள் மனிதர்களுக்கு மிகவும் உபயோகம் உள்ளவைகள்.

காற்று.

காற்றுக் கண்ணுக்குத் தோன்றாது; எங்கும் பரந்திருக்கும். அதைப் பரிசத்தால் அறியலாம். அது மெல்லவீசினால் இளங்காற்று என்றும், பலமாகவீசினாற் கடுங்காற்று என்றும் பெயர் பெறும். நிலத்திலிருந்து சுழன்றுகொண்டு மேலே எழும்புங் காற்றுக்குச் சுழல்காற்று அல்லது சூறைக்காற்று என்று பெயர். காற்று, தான் இருந்துவரும் திக்குக்களின் பேதங்களினாலே கீழ்காற்றுமுதலாகப் பல பெயர்களைப் பொருந்தும். குணங்களினாலும் வேறுபட்டிருக்கும்.

வாடை, தென்றல், கொண்டல், மேல்காற்று என்னும் நான்கு காற்றினுள்ளும் தென்றற் காற்றே உடம்புக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தருவது. அது சித்திரை, வைகாசி மாதங்களில் வீசும். கடல் நீரில் விழுந்துவரும் காற்று வாதமுதலிய நோய்களைநீக்கும்.

ஆதலாற் கடற்காற்றுப் படும்படி சிறிது நேரம் உலாவுவது உடம்புக்குச் சுகத்தைக் கொடுக்கும். பெருங்காற்றில் உலாவுவது நன்றன்று.

காற்றுச் சீவர்களுக்கு மிகவும் உபயோகமானது. நல்லகாற்று இல்லாதிருந்தால் நாங்கள் நெடுநாட் சீவிக்கமாட்டோம். நல்ல காற்று இல்லாமல் அடைபட்டிருக்கிற அறையினுள் இருந்தால், நோய் உண்டாகும். அதனால், நல்ல காற்று உலாவும் அறையில் நித்திரை செய்தல்வேண்டும்.

தேசங்கள்.

பூமியிலே பல தேசங்கள் இருக்கின்றன. அவ்வத் தேசங்களுக்குப் பாஷைகள் வெவ்வேறுவிதமாய் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்தாருடைய நிறமுணம் உருவம் செயல் என்னும் இவைகள் ஒவ்வொருவிதமாய் இருக்கும்.

தமிழ்ப்பாஷைபேசுவோர் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் பாஷைகளும், இலங்கையில் சிங்களப்பாஷையும் வழங்குகின்றன.

இந்தியாதேசம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளுள், தென்னிந்தியாவிலுள்ள சோழதேசத்தில் அநேக சிவாலயங்களும் விஷ்ணுவாலயங்களும் நெருங்கியிருக்கின்றன. தென்னிந்தியாவிலுள்ள பிரதானபட்டணங்கள் சென்னபட்டணம், பம்பாய். இந்தியாமுழுவதிற்கும் பிரதான பட்டணம் கற்கத்தா.

இலங்கைத்தீவு இந்தியாவுக்குத் தெற்கே இருக்கின்றது. அதன் பிரதானபட்டணம் கொழும்பு. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் போக்கு வரவு செய்பவர்கள் கப்பல் அல்லது தோணி ஏறிச்செல்லல்வேண்டும்.

இலங்கையில் வடபாகத்திலும் தென்மேல் பாகத்திலும் தமிழ்ப்பாஷையும், மற்றைப் பாகங்களிற் பெரும்பான்மையும் சிங்களப்பாஷையும் பேசுகிறார்கள்.

மாடு.

நாற்கால் விலங்குகளுள் மாடு நமக்கு மிகவும் உதவியுள்ளதாயிருக்கிறது. அதின் ஆண் எருது அல்லது காளை என்றும், பெண் பசு என்றும் சொல்லப்படும். எருத்து மாடு உழவும் வண்டி இழுக்கவும் உதவும். பசுமாடு பால் தரும்.

பாலைக்காய்ச்சிப் பிரை இட்டால், தயிர் ஆகும். தயிரைக்கடைந்து வெண்ணெய் எடுக்கலாம். வெண்ணெயைக் காய்ச்சினால் நெய்யாகும். பசுக்கள் தரும் பால் தயிர் நெய் கோசலம் கோமயம் என்னும் ஐந்தும் பஞ்சகவ்வியம் என்று சொல்லப்படும்.

மனிதர்கள் பசுக்களினால் அடையும் பிரயோசனத்தை வேறு எந்தமிருகங்களினாலும் அடையமாட்டார்கள். பசுக்களைத் துன்பம் அடையாதவண்ணம் காப்பாற்றுபவர்களுக்கு இம்மையில் அவைகள் தரும் பால் முதலியவைகளால் அடையும் சுகம் மாத்திரம் அன்றி, மறுமையிற் புண்ணியலோகமும் கிடைக்கும்.

பயிர்த்தொழில் செய்வோர்க்கு மாடு இல்லாவிடில் அந்தொழில் ஒருகாலத்தும் விருத்தி அடையாது. மாட்டுச்சாணி பயிர்களுக்கு நல்ல எருவாகும். வீடுகளிலே கரைத்துத் தெளிக்கிற சாணம் அசுசியைப் போக்கிச் சுத்தப்படுத்துவது மாத்திரம் அன்றி, வீடுகளில் உண்டாகும் அசுத்தவாயுவைப்போக்கிச் சுகத்தைக் கொடுக்கும்

எல்லாவிதத்தாலும் பசுக்களும் எருதுகளும் மனிதர்களுக்கு இன்றியமையாதவைகளாயிருக்கிறபடியால், அவைகளை வெய்யில் மழை உணவின்மை நோய் முதலியவைகளினாலே வருத்தமடையாதபடி சாவதானமாகக் காப்பாற்றுதல் வேண்டும்.

பக்ஷி.

கருடன், பருந்து, கழுகு, கூகை, மயில், கிளி, புறா, கொக்கு, காகம், குயில் முதலியவைகள் பக்ஷிகள். பக்ஷிகளுக்குப் பறவைகள் என்றும் பெயர். பறவைகளுள், சிறு உருவமுடைய சிலசாதிகளுக்குக் குருவிகள் என்று பெயர்,

கருடன், பருந்து முதலிய சில பறவைகள் நெடுநேரம் ஆகாயத்திலே பறந்து திரியும் மயில் கோழி முதலிய வேறு சில பறவைகள் கொஞ்சத்தூரம் மாத்திரம் பறந்து, பின் களைத்து, மரக்கொம்புகளில் அல்லது நிலத்தில் இருந்து விடும்.

சில பறவைகள் நெல்முதலிய தானியங்களையும், சில பறவைகள் மாமிசங்களையும் புசிக்கும். பருந்து, கழுகு,

காகம் என்னும் பக்ஷிகளும் நாய் நரிகளும் பிணங்களைத் தின்பதில் மிகுந்த விருப்பம் உடையவைகள்.

கிளி, நாகணவாய், மயில், கோழி முதலிய சிலபக்ஷிகளை அநேகர் வளர்க்கிறார்கள். கிளியும் நாகணவாயும் சொல்லிக்கொடுத்தபடி பேசும்.

பல சாதியான விலங்குகளையும், பறவைகளையும், ஊர்வனவற்றையும், நீர்வாழ்வனவற்றையும், கல்கத்தா சென்னபட்டணம் முதலிய இராசதானிகளில் உள்ள நூதன சாலைகளிற் பார்க்கலாம்.

தாவரம்.

மரங்களும், செடிகளும், கொடிகளும் தாவரம் என்று சொல்லப்படும். ஓரே இடத்து நின்று வளருகிறபடியால் இவைகளுக்குத் தாவரம் என்று பெயர். தாவரங்கள் நமக்கு உணவுகளைக் கொடுக்கின்றன; நிழலைச்செய்கின்றன; கண்களுக்குக் குளிர்ச்சியைச்செய்கின்றன; வாசனை உள்ள புஷ்பங்களைத் தருகின்றன; நல்லகாற்றை உண்டாக்குகின்றன; உடம்பில் உண்டாகும் வியாதிகளைத் தீர்த்தற்கு மருந்துகளுமாகின்றன.

தேக்கு, பாலை, முதிரை, தென்னை, பனைமுதலான பலசாதி மரங்களால் மனிதர்கள் வீடு கட்டிக் கொள்ளுகிறார்கள். தென்னோலை பனையோலைகளினாலே வீடு வேயலாம். பனையோலை எழுதவும், கூடை கடகம் முதலியன செய்யவும் உதவும். சில இடங்களிலே பனையின் பதநீரைக் காய்ச்சி வெல்லம் எடுத்து விற்கிறார்கள். யாழ்ப்பாணத்துப் பனைமரம் போல வைர

முள்ள பனைமரம் வேறு எங்கும் கிடைப்பது அரிது. தேங்காய் எண்ணெயும் தென்னந்தும்புக் கயிறும் மிக உபயோகமானவைகள். இவைகள் இரண்டும் மலையாளத்திலும் இலங்கையிலும் இருந்து பல இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வஸ்திரம்

குளிர் வெய்யில் முதலியவைகளினாலே வருத்தம் உறாதபடி மனிதர்களுக்குச் சுகத்தைக் கொடுத்து, மானத்தைக் காப்பாற்றி, அவர்களுக்கு அலங்காரத்தையும் பெருமையையுஞ் செய்வது வஸ்திரம். அன்னத்தைப் போல வஸ்திரமும் மனிதர்களுக்கு அவசியம் வேண்டியதாயிருக்கிறபடியினாலேதான் "அன்ன வஸ்திரம்" என்று அன்னத்தோடு வஸ்திரமுஞ் சேர்த்து எண்ணப்படுகிறது. வஸ்திரம் இல்லாவிட்டால் ஆபரணம் ஒருவருக்கும் அழகைச்செய்யாது.

வஸ்திரம் பருத்தி நூலினாலும், பட்டு நூலினாலும் நெசவுபண்ணப்படுகின்றது. பருத்திநூலினுடைய இயற்கையான நிறம் சுத்த வெண்மை. பட்டுநூலின் இயற்கையானநிறம் பொன்மை கலந்த வெண்மை. இந்த இரண்டுவகை நூல்களையும் பலவகையான சாயங்கள் ஊட்டியும் நெய்கிறார்கள். பருத்திநூல் வஸ்திரத்தை எல்லாரும் வாங்குகிறார்கள். பட்டு வஸ்திரத்தைச் செல்வர்கள் வாங்குகிறார்கள். வஸ்திரங்கள் எல்லாத் தேசங்களிலும் நெசவுபண்ணப்படுகின்றன. ஆயினும், அவ்வத்தேசத்துக்குத் தக்கபடி வஸ்திரம் பலவிதமாயிருக்கும். பட்டு ஒரு பூச்சியினாலே செய்யப்படுகிறது

பருத்திநூல் வஸ்திரம், பட்டுநூல் வஸ்திரம் என்னும் இரண்டையும் சரிகை சேர்த்து நெய்வதும் உண்டு. சரிகைவஸ்திரம் விலையேறப்பெற்றது. வஸ்திரங்கள் இன்னும் ஆட்டு உரோமத்தினாலும் சிலமரங்களினுடைய நாரினாலும் செய்யப்படுகின்றன.

எல்லாத்தேசத்தாருக்கும் இயைந்த பலவித வஸ்திரங்களும் சில காலமாக ஐரோப்பாக் கண்டத்தில் இருந்து இத்தேசங்களுக்கு வருகின்றன. வஸ்திரங்களைக் கையினாலே நெய்கிறதிலும், யந்திரங்களினாலே வெகுசீக்கிரமாக நெய்யலாம். ஐரோப்பியர்கள் யந்திரத்தினாலே நெய்கிறதினால், அவர்களுடைய வஸ்திரங்கள் மலிவாக விலைப்படுகின்றன. இந்தியாவிலே சில இடங்களிலும், இலங்கையிலே கொழும்பிலும் யந்திரத்தினால் மட்டமான வஸ்திரம் நெய்கிறார்கள்.

யானை.

யானை விலங்குகள் எல்லாவற்றினும் மிகப் பெரிய உருவமுடையது. அதினுடைய கண் அதின் உருவத்துக்குத் தக்கபடி பெரியதன்று. மற்றைமிருகங்களின் முகங்களோடு ஒத்துப்பார்க்கும்பொழுது யானையின்முகம் மிகவும் வேறுபாடு உடையதாய்த் தெரியும். அதன் மூக்கு நீண்டு கைபோலிருக்கும். அதற்குத் துதிக்கை என்றுபெயர்.

யானை உணவுகளை எடுத்து உண்பதும், தண்ணீரை மொண்டு குடிப்பதும், வேலைகள் செய்வதும் துதிக்கையினால். அதனால் மிகச்சிறிய ஊசியையும் யானை

நிலத்திலிருந்து எடுக்கும். யானைக்கு உணவு தழைகளும் வளர்ந்த புற்களும். கரும்புகள் பழங்கள் தானியங்கள் என்னும் இவைகளையும் அது தின்னும். யானையின் கழுத்து மிகக்குறியது. அதன் கொம்பு இரண்டு கடைவாய் வழியாக முளைக்கும். செவி முறம்போலவும் கால் உரல்போலவும் இருக்கும். யானைக்கொம்பினால் பல்லக்கு, சீப்பு, சதுரங்கக்காய் முதலிய பலவேலைகள் செய்வார்கள்.

யானை தனக்குப் பிறர் செய்த தீமையை நினைத்திருந்து பழிக்குப்பழிவாங்கும். யானை மிகுந்த பலமுள்ள மிருகம். அது பெரிய மரங்களை வேரோடு சாய்த்துவிடும். யானைகள் பழக்கப்பட்டபின்பு கற்பித்தவேலைகளைச் செய்யும். மனிதர்களாலே செய்யக்கூடாத அநேகவேலைகளை யானைகள் செய்து முடிக்கின்றன. யானைகள் இந்தியாவிலும், பிரமதேசத்திலும், இலங்கையிலும், ஆபிரிக்காதேசத்திலும் காணப்படுகின்றன.

உ. லோகங்கள்.

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்பன பஞ்சலோகம் எனப்படும். உலோகங்கள் எல்லாவற்றினும் பொன் மிகச்சிறந்தது. அது அதிககனமும் ஒளியும் உள்ளது. அதன் நிறம் மஞ்சள். வேறு கலப்பில்லாத சுத்தப் பொன்னைத் தங்கம் என்று சொல்லுவார்கள். அது அதிக விலையுள்ளது.

பொன்னுக்கு இரண்டாவது வெள்ளி. இது வெண்மைநிறம் உள்ளது. இதற்கு அடுத்தது செம்பு. இது

தாமிரம் என்றும் சொல்லப்படும். தாமிரம் மங்கலான சிவப்பு நிறமாயிருக்கும். புளியிட்டுத் தேய்த்தாற் பிரகாசிக்கும். ஈயம் வெண்மை நிறம் உள்ளது; ஆனால் வெள்ளியைப்போலச் சுத்த வெண்மையாயிராது. உலோகங்கள் எல்லாவற்றுள்ளும் எளிதில் அகப்படுவது இரும்பு.

பொன் வெள்ளிகளினாலே நாணயங்களும் ஆபரணங்களும், செம்பினாலே நாணயங்களும் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன. நாணகம் என்பது நாணயம் என இக்காலத்து வழங்குகின்றது. பொன் வெள்ளிகளினாலே பாத்திரங்களையும் வேறு சில வேலைகளையுஞ் செய்கின்றார்கள். ஈயத்தினாலே பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. இரும்பினாலே ஆணி, பூட்டு, சாவி, ஆயுதவகைகள், இன்னும் பலவித சாமான்கள் செய்யப்படுகின்றன. சட்டி முதலிய சிலபாத்திரங்களும் இரும்பினாற் செய்யப்படுகின்றன.

ஈயம் மற்றை உலோகங்களைக்காட்டிலும் இலேசில் இளகுந் தன்மை உள்ளது. அது அற்பநெருப்புச் சூட்டினால் உருகும். பித்தளைப்பாத்திரம் செப்புப்பாத்திரங்களுக்கு ஈயத்தை உருக்கிப் பூசினால், களிம்பு ஊறாது.

மேலே சொல்லப்பட்ட பஞ்சலோகங்களும் சில தேசங்களிலே நிலங்களில் இருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. செம்பும் துத்தநாகமுங் கலந்து பித்தளையும், செம்பும் வெள்ளீயமுங் கலந்து வெண்கல

தேச சஞ்சாரம் செய்தலும், தேச கால வர்த்தமானங்களை அறிதலும், வியாபாரஞ் செய்பவனுக்குக் கடமையாம். வியாபாரிக்குக் கணக்கு நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டியது ஆவசியகம்.

வியாபாரத்தை ஒருவர் தனித்துச் செய்வதிலும் பார்க்க, பலர்கூடிச் செய்வது உத்தமம். அங்கிலேயர் முதலிய பிறசாதியார்கள் பலர்சேர்ந்து வியாபாரஞ் செய்து, மிகுந்த திரவியத்தைச் சம்பாதிக்கிறார்கள். வேளாண்மை, வியாபாரம், கல்விகற்றல் என்னும் இவைகளுக்கு முயற்சியே சிறந்த கருவி.

மெய்ம்மை.

ஒருநாள் விடியற்காலமே இரண்டு சிறுவர்கள் ஒரு சந்தைக்குப்போய், தங்களுடைய சிறியகடைகளில் தாங்கள் கொண்டுபோன பொருள்களைப் பரப்பி வைத்து, விற்கிறதற்காக உட்கார்ந்தார்கள். ஒரு கடையில் பழங்களும் காய்கறிகளும், மற்றொன்றில் தேங்காயும் வைக்கப்பட்டிருந்தன. சந்தைகலைந்தது; இந்தச் சிறுவர்களிடத்தும் பலபேர் பொருள்கள் வாங்கிக் கொண்டு போயினார்கள்.

முருகனுடைய கடையில் எல்லாம் விற்றுக் கடைசியாய் ஒருமுலாம்பழம் மாத்திரம் இருந்தது. ஒரு பெரிய மனிதர் வந்து, கையை அந்த முலாம்பழத்தின்மேல்வைத்து, எவ்வளவுபெரிய முலாம்பழம்! இதற்கு என்னவிலை சொல்லுகிறாய், அடா தம்பி?" என்று கேட்டார்.

"இந்த முலாம்பழம் ஒன்றுதான் என்னிடத்தில் மிருந்தது; அது நல்லபழம்போல் தோன்றினாலும் அதில் கொஞ்சம் பழுது இருக்கின்றது ஐயா," என்று சொல்லி அந்தச் சிறுவன் அந்தப்பழத்தை மறுபுறம் திருப்பிக் காட்டினான்.

"ஆம் ஆம்! பழுது இருக்கின்றது! எனக்கு அது வேண்டாம்." என்று சொல்லி, அந்தப் பெரியமனிதர் அந்தச் சிறுவனுடைய அழகிய வஞ்சகமில்லாத முகத்தைப் பார்த்து, "உன்னுடைய பழத்திலுள்ள பழுதை வாங்க வருபவர்களுக்குக் காட்டுவது விற்க வந்த உனக்கு ஆகுமா?" என்று கேட்டார்.

"பொய்சொல்வதைப் பார்க்கினும் இது நல்லது, ஐயா" என்று அந்தச் சிறுவன் பணிவுடன் சொன்னான். "நீ சொன்னது சரி, அடா தம்பி, ஒருபோதும் அதை மறவாதே. நான் உன்னுடைய கடையை இனி மறவேன்." என்றுசொல்லி, அந்தப்பெரிய மனிதர் கிருஷ்ணன் கடைமுகமாகத் திரும்பி, "இது என்ன நல்ல பழத்தேங்காயா?" என்று கேட்டார். "ஆம், ஐயா, நல்லபழக்காய்! நேற்றுத்தான் பிடுங்கினது—நான்தான் உரித்தேன்." என்று கிருஷ்ணன் மறுமொழி சொன்னான். அந்தப்பெரியமனிதர் அதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போயினார்.

"முருகா, நீ என்ன பெரிய மூடன்! முலாம்பழத்திலுள்ள பழுதை அந்தமனிதனுக்குக் காட்டுகிறதா! நீ சொன்ன உண்மைக்காக அந்தப் பழத்தை இனி

வீட்டுக்குக் கொண்டுபோ, அல்லது எங்கேயாவது எறிந்துவிடு. அந்தமுட்டுக்காயை வாங்கிக்கொண்டு போகின்றாரே, அவர் அதைப்பற்றி என்ன அறிந்துவிட்டது? நல்லபழக்காய்கள் விற்றவிலைக்கே அதையும் விற்றேன். அந்த மூலாம்பழத்தை ஒன்றும் பாராமல் வாங்கிக்கொண்டுபோயிருப்பார்.

"கிருஷ்ணா, எனக்கு இன்றுகாலமே கிடைத்த காசைப்போல இரண்டுபங்கு காசுதான் வந்தாலும் நான் ஒரு பொய் சொல்லவும் மாட்டேன், பொய்யாய் நடக்கவும் மாட்டேன். அல்லாமல், இது கடைசியிலே எனக்குத்தான் நயம்; எனக்கு ஒரு வழக்கக்காரர் அகப்பட்டார், உனக்கொருவர் போய்விட்டார்!"

அது அப்படியே நடந்தது: மறுநாள் அந்தப்பெரிய மனிதர் தனக்கு வேண்டியபழங்களையும் காய்கறிகளையும் எல்லாம் முருகனிடத்திலேயே வாங்கினார்; கிருஷ்ணனுடைய கடையில் ஒரு சல்லிக்குக் கூட ஒன்றும் வாங்கவில்லை. இந்தவிதமாகவே அந்தவருஷம் கழிந்தது. முருகனிடத்தில் எப்போதும் நல்ல பொருள் வாங்கலாம் என்று கண்டுகொண்டு அவர் அவனுடைய கடைக்கே எப்போதும் போவார்; சில வேளை அவனிடத்தில் "மறுவருஷம் நீ என்னசெய்யப்போகிறாய்" என்று விசாரிப்பார்.

மறுவருஷம் அந்தப்பெரிய மனிதருடைய பண்டகசாலையில் ஒரு நம்பிக்கையான சிறுவன் வேண்டியிருந்தது; அவர் முருகனைப்பார்க்கினும் வேறொருவன்

அகப்படான் என்று நினைத்து முருகனுக்கே அந்தவேலையைக் கொடுத்தார். அவன் தன் எசமானனுக்குத் தன்னிடத்தில் மேலும் மேலும் நல்ல எண்ணம் வரும்படி நடந்து, ஒவ்வொரு உத்தியோகமாக உயர்ந்து, கடைசியில் எசமானனோடு வர்த்தகத்தில் ஒருபங்காளி ஆயினன்.

யுகம் ௪.

கிருதயுகம்	வரு ௰௭	லக்ஷத்து	௨௮௲
திரேதாயுகம்	வரு ௰௨	லக்ஷத்து	௯௬௲
துவாபரயுகம்	வரு ௮	லக்ஷத்து	௬௪௲
கலியுகம்	வரு ௪	லக்ஷத்து	௩௨௲

வருஷம் ௬௰.

பிரபவ	பிரமாதி	கர
விபவ	விக்கிரம	நந்தன
சுக்கில	விஷு	விஜய
பிரமோதூத	சித்திரபானு	ஜய
பிரசோற்பத்தி	சுபானு	மன்மத
ஆங்கீரச	தாரண	துர்முகி
ஸ்ரீமுக	பார்த்திவ	ஏவிளம்பி
பவ	விய	விளம்பி
யுவ	சர்வசித்து	விகாரி
தாது	சர்வதாரி	சார்வரி
ஈஸ்வர	விரோதி	பிலவ
வெகுதானிய	விகிர்தி	சுபகிருது

சோபகிருது	விரோதிகிருது	சித்தார்த்தி
குரோதி	பரிதாவி	ரௌத்திரி
விசுவாவசு	பிரமாதீச	துர்மதி
பராபவ	ஆனந்த	துந்துபி
பிலவங்க	ராக்ஷச	ருதிரோற்காரி
கீலக	நள	ரக்தாக்ஷி
சௌமிய	பிங்கள	குரோதன
சாதாரண	காலயுக்தி	அக்ஷய

அயனம் ௨.

உத்தராயணம், தக்ஷிணாயனம்.

தைமீ முதல் ஆறுமாசம் உத்தராயணம்
ஆடிமீ முதல் ஆறுமாசம் தக்ஷிணாயனம்

ருது ௬.

சித்திரைமீ, வைகாசிமீ	வசந்தருது	ஐப்பசிமீ, கார்த்திகை	சரருது
ஆனிமீ, ஆடிமீ	கிரீஷ்மருது	மார்கழிமீ, தைமீ	ஏமந்தருது
ஆவணிமீ, புரட்டாசி	வருஷருது	மாசிமீ, பங்குனிமீ	சிசிரருது

மாசம் ௧௨.

சித்திரை	ஆனி	ஆவணி
வைகாசி	ஆடி	புரட்டாசி

ஐப்பசி	மார்கழி	மாசி
கார்த்திகை	தை	பங்குனி

வாரம் - ௭.

ஞாயிறு	செவ்வாய்	வியாழம்	சனி
திங்கள்	புதன்	வெள்ளி	

பக்கம் ௨.

சுக்கிலபக்கம் கிருஷ்ணபக்கம்.

திதி ௰௫.

பிரதமை	சத்தமி	திரயோதசி
துதியை	அஷ்டமி	சதுர்த்தசி
திருதியை	நவமி	பௌர்ணிமை
சதுர்த்தி	தசமி	அல்லது
பஞ்சமி	ஏகாதசி	அமாவாசை
சட்டி	துவாதசி	

நக்ஷத்திரம் ௨௭.

அச்சுவினி	திருவாதிரை	பூரம்
பரணி	புனர்பூசம்	உத்தரம்
கார்த்திகை	பூசம்	அத்தம்
உரோகிணி	ஆயிலியம்	சித்திரை
மிருகசீரிடம்	மகம்	சுவாதி

விசாகம்	பூராடம்	சதயம்
அனுடம்	உத்தராடம்	பூரட்டாதி
கேட்டை	திருவோணம்	உத்தரட்டாதி
மூலம்	அவிட்டம்	இரேவதி

யோகம் ௨௭.

விட்கம்பம்	கண்டம்	பரிகம்
பிரீதி	விருத்தி	சிவம்
ஆயுஷ்மான்	துருவம்	சித்தம்
சௌபாக்கியம்	வியாகாதம்	சாத்தியம்
சோபனம்	அர்ஷணம்	சுபம்
அதிகண்டம்	வச்சிரம்	சுப்பிரம்
சுகர்மம்	சித்தி	பிரமம்
திருதி	விதிபாதம்	மகேந்திரம்
சூலம்	வரியான்	வைதிருதி

கரணம் ௰௧.

பவம்	கரசை	சதுஷ்பாதம்
பாலவம்	வணிசை	நாகவம்
கௌலவம்	பத்திரம்	கிந்துக்கினம்
தைதிலம்	சகுனி	

இராசி ௰௨.

மேடம்	மிதுனம்	சிங்கம்
இடபம்	கர்க்கடகம்	கன்னி

துலாம்	தனு	கும்பம்
விருச்சிகம்	மகரம்	மீனம்

இராசிமாசம் ௰உ.

மேடம்—சித்திரை	துலாம்—ஐப்பசி
இடபம்—வைகாசி	விருச்சிகம்—கார்த்திகை
மிதுனம்—ஆனி	தனு—மார்கழி
கர்க்கடகம்—ஆடி	மகரம்—தை
சிங்கம்—ஆவணி	கும்பம்—மாசி
கன்னி—புரட்டாதி	மீனம்—பங்குனி

கிரகம் கூ.

சூரியன்	புதன்	சனி
சந்திரன்	வியாழன்	இராகு
செவ்வாய்	வெள்ளி	கேது

திக்கு அ.

கிழக்கு	தென்மேற்கு	வடக்கு
தென்கிழக்கு	மேற்கு	வடகிழக்கு
தெற்கு	வடமேற்கு	

திக்குப்பாலகர் அ.

இந்திரன்	நிருதி	குபேரன்
அக்கினி	வருணன்	ஈசானன்
இயமன்	வாயு	

வசந்தருது—இளவேனிற்பருவம்
கிரீஷ்மருது—முதுவேனிற்பருவம்
வருஷருது—கார்ப்பருவம்
சரருது—கூதிர்ப்பருவம்
ஏமந்தருது—முன்பனிப்பருவம்
சிசிரருது—பின்பனிப்பருவம்

சுக்கிலபக்கத்துக்குப் பூர்வபக்கமென்றும் பெயர்.
கிருஷ்ணபக்கத்துக்கு அபரபக்கமென்றும் பெயர்.

தாய் செய்த நன்றி.

தன் மிருதுவாகிய முலையினால் உனக்குப் பால் ஊட்டி, தன் கைகளிலே நீ நித்திரை செய்யும்படி உன் கன்னத்தில் இனிமையாகிய முத்தங்கொடுத்தவள் எவள்? என் தாய்.

நித்திரை உன் கண்ணைவிட்டு நீங்கின பொழுது, நீ உறக்கங் கொள்ளும்படி இனிமையான கீதங்களைப் பாடி, நீ அழாதபடிக்குத் தாலாட்டினவள் எவள்? என் நற்றாய்.

நீ தொட்டிலில் நித்திரைசெய்யும்பொழுது, தொட்டிலை ஆட்டிக்கொண்டு, உன்னுடன் கூட இருந்து உன்னைச் சாவதானமாகக் காப்பாற்றி, உனக்காக அன்பின் கண்ணீர் விட்டவள் எவள்? என் அன்னை.

நீ வியாதியினாலும் துன்பத்தினாலும் அழுதபொழுது; துக்கக்குறியையுடைய உன் கண்ணைப்பார்த்து,

நீ இறந்துபோவாயோ என்று பயந்து அழுதவள் எவள்? என் மாதா.

நீ விழுந்தபொழுது உனக்கு உதவி செய்யும்படி ஓடிவந்து, இனிமையான கதைகளைச் சொல்லி, உன் காயத்தைச் சவுக்கியப்படுத்த உனக்கு முத்தங்கொடுத்தவள் எவள்? என் அருமைத்தாய்.

நீபாவஞ்செய்யாமல் விலகும் பொருட்டும், புண்ணியத்தைச் செய்யும்பொருட்டும், கடவுளிடத்தே அன்புவைத்து அவரை எந்நாளும் வழிபடும் பொருட்டும், உனக்குப் போதித்தவள் எவள்? என்னைப் பெற்றதாய்.

இப்படியே உன்னிடத்தில் இவ்வளவு அதிக அன்புள்ளவளாய் இருக்கின்ற உன் மாதாவினிடத்திலே நீ எப்பொழுதாவது அன்பில்லாதவனாய் நடக்கலாமா? நடக்கலாகாது.

பிள்ளையே, நீ கடவுளுடைய திருவருளினாலே சீவனோடிருக்கும் வரையும், உன் அன்புள்ள மாதா உனக்காகப் பட்ட பிரயாசத்துக்கு நீ பிரதிபலன் அளிக்கும்படி விரும்பிக் காத்திருக்கவேண்டும்.

நித்தியகருமவிதி.

ஈசுரத்தியானம்.

சூரியன் உதிக்குமுன் நித்திரைவிட்டெழுந்து சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்து, முக

த்தையும் கை கால்களையும் கழுவி, சாந்துவட்டி, கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாக வேனும் இருந்துகொண்டு கடவுளைத் தியானித்துத் தோத்தி ரம் பண்ணக்கடவாய்.

அவசியகருமம்.

பின்பு வீட்டினின்றும் புறப்பட்டு, மலசலங்கழிக் கத் தக்க தனியிடத்தை அடைந்து, பூணூலை வலக் காதிலே சேர்த்து, தலையையும் காதுகளையும் வஸ்திர த்தினாலே சுற்றி, மௌனம் பொருந்தி, பகலிலே வட க்கு முகமாகவும், இரவிலே தெற்குமுகமாகவும், மூக் குநுனியைப் பார்த்துக்கொண்டிருந்து, மலசலமோ சனஞ் செய்யக்கடவாய்.

வழியிலும், குழியிலும், நீர்நிலையிலும், நீர்க்கரையி லும், கோமயம் உள்ள இடத்திலும், சாம்பர் உள்ள இடத்திலும், சுடுகாட்டிலும், பூந்தோட்டத்திலும், மர நிழலிலும், உழுத நிலத்திலும், அறுகம்பூமியிலும், பசு மந்தைநிற்கும் இடத்திலும், புற்றிலும், அருவி பாயும் இடத்திலும், மலையிலும் மலசலங்கழிக்கலாகாது.

சௌசம்.

மலசலங்கழித்த உடனே எழுந்து, சலக்கரையை அடைந்து, சலத்துக்கு ஒருசாணுக்கு இப்பால் இருந் துகொண்டு, இடக்கையினாலே, மண்ணுஞ் சலமுங் கொண்டு, குறியில் ஒருதரமும், குதத்தில் ஐந்துதரத் துக்குமேலும், இடக்கையை இடையிடையே ஒவ்வொ ருதரமும் சுத்திசெய்யக்கடவாய். பின்னும், இடக்

கைக்குப் பத்துத்தாமும், இரண்டுகையையுஞ் சேர்த்து ஏழுதாமும் சுத்திசெய்து, சகனத்தைத் துடைத்து, கால்களை முழங்கால்வரையும், கைகளை முழங்கைவரையும், ஒவ்வொருதாம் கழுவக்கடவாய்.

பின்பு அவ்விடத்தை விட்டு,வேறொரு துறையிலே போய், வாயையும் கண்களையும் நாசியையும் காதுகளையும் கை கால்களில் உள்ள நகங்களையும் சுத்திசெய்து எட்டுத்தாம் சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்து, தலைக்கட்டு இல்லாமல் ஆசமனம் பண்ணக்கடவாய்.

நதி முதலிய புண்ணிய தீர்த்தங்களிலே சௌசம் பண்ணலாகாது. சௌசத்துக்குச் சமீபத்திலே சலம் இல்லையானால், பாத்திரத்திலே சலம் மொண்டு வைத்துக்கொண்டு மலசலங்கழித்து, சௌசஞ்செய்துவிட்டு, பாத்திரத்தைச் சுத்திசெய்து.சலமொண்டு, வாய் கொப்பளித்து, கால் கழுவக்கடவாய்.

தந்தசுத்தி.

தந்தசுத்திக்கு உரிய கொம்பையேனும், இலையையேனும் சலத்தினாலே கழுவி, கிழக்கு நோக்கியாயினும் வடக்குநோக்கியாயினும் இருந்துகொண்டு, பல்லின் புறத்தையும் உள்ளையும் செவ்வையாகச் சுத்திசெய்து ஒருகழியை இரண்டாகப் பிளந்து, ஒவ்வொருபிளப்பை மும்மூன்றுதாம் உண்ணுக்களவாக ஒட்டி நாக்கை வழித்து, இடப்புறத்திலே போட்டுவிட்டு, சலம் வாயிற்கொண்டு பன்னிரண்டு தாம் இட

ப்புறத்திலே கொப்பளித்து, முகத்தையும் கைகால்க ளையும் கழுவக்கடவாய்.

செங்கல்லினாலேனும், சாம்பராலேனும், மணலினா லேனும், பட்ட மரத்தினாலேனும், தந்தசுத்தி பண்ண லாகாது. நின்றுகொண்டாயினும், நடந்துகொண்டா யினும், போர்த்துக்கொண்டாயினும், தந்தசுத்திபண் ணலாகாது.

பாடம் படித்தல்.

தந்தசுத்தி செய்தவுடனே, உன்னுடைய மாதாவை யும் பிதாவையும் நமஸ்கரித்து, உன் புதுப்பாடங்க ளைச் சாவதானமாகப் படித்து வரப்பண்ணிக்கொ ண்டு, பழைய பாடங்களை வாசித்து, தெரியாதவை களைக் கேட்டறிந்து, கல்வியிலே தேறக்கடவாய்.

ஸ்நானம்.

நதி குளம் முதலிய நீர்நிலையை அடைந்து, கௌபீ னத்தைக் கசக்கிப் பிழிந்து தரித்து, இரண்டுகைகளை யுங்கழுவி,வேட்டியைத் தோய்த்து,அலம்பித்தரித்து, உடம்பைச் செவ்வையாகத் தேய்த்து, கொப்பூழளவி னதாகிய சலத்திலே இறங்கி,நதியிலேயானால் அதற்கு எதிர்முகமாக நின்றும், குளமுதலியவைகளிலேயா னால் கிழக்குமுகமாகவேனும் வடக்குமுகமாகவே னும் நின்றும், இரண்டு காதுகளையும் இரண்டு பெரு விரல்களினாலும், இரண்டுகண்களையும் இரண்டு சுட்டு விரல்களினாலும், இரண்டு நாசிகளையும் இரண்டு நடு

விரல்களினாலும் மூடிக்கொண்டு, கடவுளைச் சிந்தித்து, ஸ்நானம் பண்ணக்கடவாய்.

ஸ்நானஞ்செய்த உடனே கரையிலேறி, வேட்டியைப்பிழிந்து, சூரியனெதிரே உதறி, உலர்ந்ததாகப் பாவித்து, உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டி, குடுமியைமுடித்து, ஈரக் கௌபீனத்தைக் களைந்து, உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து, இரண்டு கைகளையுங்கழுவி, உலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, ஈரவஸ்திரத்தை உலரும்படி கொடியிலே போடக்கடவாய்.

ஈசுரவந்தனம்.

கிழக்குமுகமாகவேனும் வடக்குமுகமாகவேனும் அசைவற இருந்து, கடவுளை அன்புடனே தியானித்துத் தோத்திரஞ்செய்து, எழுந்து மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்காரம் பண்ணக்கடவாய்.

போசனம்.

கோமயத்தினாலே மெழுகப்பட்ட இடத்திலே, சலத்தினாலே கழுவப்பட்ட இலையைப் போட்டு, அதிலே சலத்தினாலே புரோக்ஷித்து, அன்னம் கறி முதலியவைகளைப் படைப்பித்து, வீண் வார்த்தை பேசாமலும், தூங்காமலும், அசையாமலும், செவ்வையாக இருந்து, வேறொன்றையும் நினையாமல் கடவுளையே சிந்தித்துக்கொண்டு, அன்னத்தைச் சிந்தாமற் போசனம்பண்ணி, சலபானம் பண்ணக்கடவாய்.

போசனத்துக்குரிய பாத்திரங்களாவன வாழையிலை, பலாவிலை, புன்னையிலை, பலாசிலை, பாதிரியிலை, தாமரையிலை என்பவைகளாம். வாழையிலையைத் துண்டுரியாமல் அதினுடைய அடி வலப்பக்கத்திலே பொருந்தும்படி போடவேண்டும்.

பந்தியில் இருந்து போசனம்பண்ணும் பொழுது, பெரியோர் புசிக்கத் தொடங்குமுன்னே நீ புசிக்கத் தொடங்கிவிடாதே. அவர் எழும்புதற்குமுன்னே நீ எழும்பிவிடாதே. அவரை நெருக்கி இராதே.

கிடந்துகொண்டாயினும், நின்றுகொண்டாயினும், வெளியில் இருந்தாயினும், கட்டிலில் இருந்தாயினும், போசனமேனும் பானமேனும் பண்ணலாகாது.

நெய்யையேனும் லவணத்தையேனும் உச்சிட்டத்திலே படைத்துக்கொள்ளலாகாது. பாலுடனே லவணம் கூட்டலாகாது.

போசனஞ்செய்த உடனே வீட்டுக்குப் புறத்தே போய், கைகளைக் கழுவி, சலம் வாயிற்கொண்டு பதினாறுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து, வாயையும் கைகளையும் கால்களையுங் கழுவக்கடவாய்.

நீயே உச்சிட்டத்தை அகற்றவேண்டிய இடத்து, இலையை எடுத்து எறிந்துவிட்டு, கை கால்களைக் கழுவிக்கொண்டு, உச்சிட்டத்தானத்தைக் கோமயங்கரைத்த சலந்தெளித்து, இடையிலே கையை எடாமலும், முன்பு தீண்டிய இடத்தைப் பின்பு தீண்டாமலும் புள்ளியில்லாமல் மெழுகி, புறத்தே போய்க் கை

கழுவிவிட்டு, பின்னும் அந்தத் தானத்திலே கோமயங் கரைத்த சலம் தெளித்துவிடக்கடவாய்.

பள்ளிக்கூடத்துக்குப் போதல்.

போசனஞ்செய்த உடனே, புத்தகங்களை எடுத்துக் கொண்டு, பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப் போய், உபாத்தியாயரிடத்திலே பாடங்களை ஒப்பித்து, அவர் விளக்குகிறதைக் கருத்தாகக்கேட்டு, மனசில் வைக்கக்கடவாய். அங்கே எழுதவேண்டிய சட்டங்களை எழுதி, செய்யவேண்டிய கணக்குகளைச் செய்து, பிள்ளைகளுடனே சண்டை செய்யாமல், உபாத்தியாயருடைய சொல்லுக்கு அச்சத்தோடும் அன்போடும் அமைந்து நடக்கக்கடவாய். படிக்கும்பொழுது அந்த அந்த அடையாளத்துக்கு இசைய நிறுத்திப் படிக்க வேண்டும். ஒவ்வொருசொல்லையும் தெளிவாக உச்சரிக்கவேண்டும். புத்தகங்களை இழந்து போகாமலும் அழுக்கு ஏறவொட்டாமலும் சாவதானமாகக்காப்பாற்றல்வேண்டும். பள்ளிக்கூடம் முடிந்தவுடனே, தெருவிலே சண்டைசெய்யாமலும், சிறிதும் தாழ்க்காமலும், வீட்டுக்குத் திரும்பல்வேண்டும்.

இரவிற்செய்யுங்கருமம்.

சூரியன் அத்தமிக்கும்பொழுது வாய் கொப்பளித்துக் கை கால் கழுவி, கடவுளை வழிபட்டுக்கொண்டு விளக்கிலே, நீ கேட்ட பாடங்களைச் சிந்தித்து, புதுப்பாடங்களைப் படித்து, பழம்பாடங்களைப் போற்றக்கடவாய்.

பின்பு போசனஞ்செய்து சிறிதுநேரம் உலாவிக்கொண்டு, சயனஸ்தானத்தை அலகிடுவித்து, சயனத்தைத் தட்டி விரித்து, கடவுளைச் சிந்தித்துக்கொண்டு நித்திரை செய்யக்கடவாய். சூரியோதயத்துக்குமுன் எழும்பிவிடக்கடவாய்.

நித்தியகருமவிதி முற்றிற்று.

பெரியோரை வழிபடல்.

தாய், தகப்பன், தமையன், தமக்கை, பாட்டன், பாட்டி, மாமன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை அச்சத்தோடும் அன்போடும் வழிபடல் வேண்டும்.

பெரியோரெதிரே உயர்ந்த ஆசனத்திருத்தலும், காலை நீட்டிக்கொண்டிருத்தலும், காலின்மேலே கால் போட்டுக்கொண்டிருத்தலும், சயனித்தலும், சிரித்தலும், எதிர்த்துப் பேசுதலும், கை சுட்டிப் பேசுதலும், எச்சிலுமிழ்தலும், அரையிலே கையூன்றுதலும், காலைத்தூக்கி உயர்ந்த தானத்தில் வைத்துக்கொண்டு நிற்றலும், போர்த்துக்கொள்ளுதலும் ஆகாவாம்.

பெரியோர் முன்னே போம்பொழுது, வேட்டியை ஒதுக்கிக்கொண்டு, தணிந்த நடையுடனே போகக்கடவாய். அவர் சமீபத்திலே நின்று பேசும்பொழுது வாய் புதைத்து நின்று பேசக்கடவாய்.

பெரியோர் உன்னுடனே பேசும்பொழுது, நீவேறொன்றையும் பாராமலும, வேறொன்றுக்குச் செவிகொடாமலும்,அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு அவர் வார்த்தைக்கே செவிகொடுக்கக்கடவாய்.

பெரியோருடனே நீ பேசும்பொழுது, வேறொன்றையும் பாராமல், அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு பேசக்கடவாய். பெரியோரிடத்திலே அவரை 'சுவாமீ' 'ஐயா' என்பவை முதலிய வார்த்தைகளினாலே உயர்த்தியும், உன்னை 'அடியேன்' 'தமியேன்' என்பவை முதலிய வார்த்தைகளினாலே தாழ்த்தியும், பேசக்கடவாய்.

பெரியோர் உனக்கு ஒன்றைத் தரும்பொழுது, நீ எழும்பி, இரண்டுகையினாலும்,வாங்கக்கடவாய்.பெரியோருக்கு நீ ஒன்றைக் கொடுக்கும்பொழுது,எழும்பி இரண்டுகையினாலும் கொடுக்கக்கடவாய்.

பெரியோர் உன் வீட்டுக்கு வந்தாராயின்,நீ அவரை விரைந்து எதிர்கொண்டு கும்பிட்டு அழைத்துக்கொண்டுவந்து, ஆசனத்திலே இருத்தி,அவரை மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து, எழும்பி, அவர் 'இரு' என்ற பின் இருக்கக்கடவாய். அவர் போம்பொழுது எழும்பி,அவர்பின்னே சிறிது தூரம் போய், அவரைக் கும்பிட்டு,விடைபெற்றுக்கொண்டு திரும்பக்கடவாய்.

பின்பு போசனஞ்செய்து சிறிதுநேரம் உலாவிக்கொண்டு, சயனஸ்தானத்தை அலகிடுவித்து, சயனத்தைத் தட்டி விரித்து, கடவுளைச் சிந்தித்துக்கொண்டு நித்திரை செய்யக்கடவாய். சூரியோதயத்துக்குமுன் எழும்பிவிடக்கடவாய்.

நித்தியகருமவிதி முற்றிற்று.

பெரியோரை வழிபடல்.

தாய், தகப்பன், தமையன், தமக்கை, பாட்டன், பாட்டி, மாமன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை அச்சத்தோடும் அன்போடும் வழிபடல் வேண்டும்.

பெரியோரெதிரே உயர்ந்த ஆசனத்திருத்தலும், காலை நீட்டிக்கொண்டிருத்தலும், காலின்மேலே கால் போட்டுக்கொண்டிருத்தலும், சயனித்தலும், சிரித்தலும், எதிர்த்துப் பேசுதலும், கை சுட்டிப் பேசுதலும், எச்சிலுமிழ்தலும், அரையிலே கையூன்றுதலும், காலைத் தூக்கி உயர்ந்த தானத்தில் வைத்துக்கொண்டு நிற்றலும், போர்த்துக்கொள்ளுதலும் ஆகாவாம்.

பெரியோர் முன்னே போம்பொழுது, வேட்டியை ஒதுக்கிக்கொண்டு, தணிந்த நடையுடனே போகக்கடவாய். அவர் சமீபத்திலே நின்று பேசும்பொழுது வாய் புதைத்து நின்று பேசக்கடவாய்.

பெரியோர் உன்னுடனே பேசும்பொழுது, நீவே ெறான்றையும் பாராமலும், வேறொன்றுக்குச் செவி கொடாமலும், அவர் முகத்தையே பார்த்துக்கொண்டு அவர் வார்த்தைக்கே செவிகொடுக்கக்கடவாய்.

பெரியோருடனே நீ பேசும்பொழுது, வேறொன் றையும் பாராமல், அவர் முகத்தையே பார்த்துக்கொ ண்டு பேசக்கடவாய். பெரியோரிடத்திலே அவரை 'சுவாமீ' 'ஐயா' என்பவை முதலிய வார்த்தைகளி னாலே உயர்த்தியும், உன்னை 'அடியேன்' 'தமியேன்' என்பவை முதலிய வார்த்தைகளினாலே தாழ்த்தியும், பேசக்கடவாய்.

பெரியோர் உனக்கு ஒன்றைத் தரும்பொழுது, நீ எழும்பி, இரண்டுகையினாலும், வாங்கக்கடவாய். பெரி யோருக்கு நீ ஒன்றைக் கொடுக்கும்பொழுது, எழும்பி இரண்டுகையினாலும் கொடுக்கக்கடவாய்.

பெரியோர் உன் வீட்டுக்கு வந்தாராயின், நீ அவரை விரைந்து எதிர்கொண்டு கும்பிட்டு அழைத்துக்கொ ண்டுவந்து, ஆசனத்திலே இருத்தி, அவரை மூன்றுதர மாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து, எழும்பி, அவர் 'இரு' என்ற பின் இருக்கக்கடவாய். அவர் போம்பொழுது எழும்பி, அவர்பின்னே சிறிது தூரம் போய், அவரைக் கும்பிட்டு, விடைபெற்றுக்கொண்டு திரும்பக்கடவாய்.

இரண்டாம்பிரிவு.

ஔவையார் அருளிச்செய்த

ஆத்திசூடி

மூலமும் உரையும்.

காப்பு.

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

இதன்பொருள்.

ஆத்தி — திருவாத்திப்பூமாலையை, சூடி — தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த — விரும்பிய, தேவனை — பிள்ளையாகிய விநாயகக்கடவுளை, ஏத்திஏத்தி — துதித்துத் துதித்து, தொழுவோம் — வணங்குவோம், யாம் — நாங்கள் என்றவாறு.

தேவன் — பிள்ளை. ஏ ஈற்றசை.

சூத்திரம்.

க. அறஞ்செய விரும்பு.

அறம் — தருமத்தை, செய — செய்தற்கு, விரும்பு — நீ ஆசைகொள்ளு.

உ. ஆறுவது சினம்.

ஆறுவது—(உன்னுள்ளே) தணிய வேண்டுவது, சினம்—கோபமே ஆம்.

ங. இயல்வது கரவேல்.

இயல்வது—(கொடுப்பதற்கு)இசைவதை, கரவேல்—(நீ வறுமையினாலே இரப்பவர்களுக்கு) ஒளியாதே.

ச. ஈவது விலக்கேல்.

ஈவது—(தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்—நீ தடுக்காதே.

ரு. உடையது விளம்பேல்.

உடையது—(உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல்—(நீ பிறர் அறியும்படி) சொல்லாதே.

சா. ஊக்கமது கைவிடேல்.

ஊக்கமது—(செய்தொழிலில்) மனஞ்சோராமையை, கைவிடேல்—நீ கைவிடாதே.

எ. எண்ணெழுத் திகழேல்.

எண்—கணிதநூலையும், எழுத்து—இலக்கண நூலையும், இகழேல்—நீ இகழ்ந்து தள்ளாதே. (புகழ்ந்து கல் என்பது கருத்து.)

கணிதம்—கணக்கு.

அ. ஏற்ப திகழ்ச்சி.

ஏற்பது—(ஒருவரிடத்திலே போய்) இரப்பது, இகழ்ச்சி—பழிப்பாகும்.

இரண்டாம்பிரிவு.

ஔவையார் அருளிச்செய்த

ஆத்திசூடி

மூலமும் உரையும்.

காப்பு.

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

இதன்பொருள்.

ஆத்தி—திருவாத்திப்பூமாலையை, சூடி—தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த—விரும்பிய, தேவனை—பிள்ளையாகிய விநாயகக்கடவுளை, ஏத்திஏத்தி—துதித்துத் துதித்து, தொழுவோம்—வணங்குவோம், யாம்—நாங்கள் என்றவாறு.

தேவன்—பிள்ளை. ஏ ஈற்றசை.

சூத்திரம்.

௧. அறஞ்செய விரும்பு.

அறம்—தருமத்தை, செய—செய்தற்கு, விரும்பு—நீ ஆசைகொள்ளு.

உ. ஆறுவது சினம்.

ஆறுவது—(உன்னுள்ளே) தணிய வேண்டுவது, சினம்—கோபமே ஆம்.

௩. இயல்வது கரவேல்.

இயல்வது—(கொடுப்பதற்கு) இசைவதை, கரவேல்—(நீ வறுமையினாலே இரப்பவர்களுக்கு) ஒளியாதே.

௪. ஈவது விலக்கேல்.

ஈவது—(தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல்—நீ தடுக்காதே.

௫. உடையது விளம்பேல்.

உடையது—(உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல்—(நீ பிறர் அறியும்படி) சொல்லாதே.

௬. ஊக்கமது கைவிடேல்.

ஊக்கமது—(செய்தொழிலில்) மனஞ்சோராமையை, கைவிடேல்—நீ கைவிடாதே.

௭. எண்ணெழுத் திகழேல்.

எண்—கணித நூலையும், எழுத்து—இலக்கண நூலையும், இகழேல்—நீ இகழ்ந்து தள்ளாதே. (புகழ்ந்து கல் என்பது கருத்து.)

கணிதம்—கணக்கு.

௮. ஏற்ப திகழ்ச்சி.

ஏற்பது—(ஒருவரிடத்திலே போய்) இரப்பது, இகழ்ச்சி—பழிப்பாகும்.

௯. ஐய மிட்டுண்.

ஐயம்—பிச்சையை, இட்டு—(இரப்பவர்களுக்குக்) கொடுத்து, உண்—நீயும் உண்ணு.

௧௦. ஒப்புர வொழுகு.

ஒப்புரவு—உலகநடையை அறிந்து, ஒழுகு—(நீ அந்தவழியிலே) நட.

௧௧. ஓதுவ தொழியேல்.

ஓதுவது—(அறிவுநூல்களை) வாசிப்பதை, ஒழியேல்—(நீ மரணபரியந்தம்) விடாதே.

௧௨. ஔவியம் பேசேல்.

ஔவியம்—பொறாமை வார்த்தைகளை, பேசேல்—நீ பேசாதே.

௧௩. அஃகஞ் சுருக்கேல்.

அஃகம்—தானியவிலையை, சுருக்கேல்—(நீ அதிக லாபத்துக்காகக்) குறையாதே.

௧௪. கண்டொன்று சொல்லேல்.

கண்டு—(ஒன்றைக்)கண்டு, ஒன்று—வேறொன்றை, சொல்லேல்—(நீ சாக்ஷியாகும்போது) சொல்லாதே. [கண்டபடியே சொல்லென்பது கருத்து.]

௧௫. ஙப்போல் வளை.

ஙப்போல்—ஙகரம்(தான் பிரயோசனமுள்ளதாய் இருந்து தன்வருக்கத்தைத் தழுவுதல்) போல, வளை—(நீ பிரயோசனமுள்ளவனாய் இருந்து உன் இனத்தைத்) தழுவு.

ஙகரமானது அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் என்று சொல்லுக்குக் காரணமாய் வரும். அதின் வருக்கங்களாகிய

ஙா ஙி ஙீ ஙு ஙூ ஙெ ஙே ஙை ஙொ ஙோ ஙௌ என்கிற பதினொன்றும் சொல்லுக்குக் காரணமாதல் இல்லை. ஆயினும், ஙகரத்தின்பொருட்டு இவைகளையும் நெடுங்கணக்கிலே வழங்குவார்கள். அதுபோலவே, நீ கல்விசெல்வங்களினாலே பிறருக்கு உதவி செய்வாயாயின், அவர் உன்னைத் தழுவுவதன்றி உன்பொருட்டு உன் இனத்தாரையும் தழுவுவர் என்பதாம்.

௧௬. சனிநீ ராடு.

சனி—சனிக்கிழமைதோறும், நீர் ஆடு—(எண்ணெய் இட்டுக்கொண்டு) நீரிலே தலைமுழுகு.

புதன்கிழமையிலும் முழுகலாம்.

௧௭. ஞயம்பட வுரை.

ஞயம்பட—(பேசுஞ்சொல்லிலே) இன்பம் விளையும்படி, உரை—நீ பேசு.

நயம் என்பது ஞயம் எனப் போலியாயிற்று.

௧௮. இ, டம்பட வீடெடேல்.

இடம்—இடமானது, பட—(அளவுக்கு மேற்பட்டு வெறுமையாய்)கிடக்கும்படி, வீடு—வீட்டை, எடேல்—(நீ பெரிதாகக்) கட்டாதே.

௧௯. இ, ணக்கமறிந் திணங்கு.

இணக்கம்—(சினேகத்துக்கு ஏதுவாகிய) நற்குண நற்செய்கைகளை, அறிந்து—தெளிந்து, இணங்கு—(பின் ஒருவனோடு) சினேகஞ்செய்.

௨௦. தந்தை தாய் பேண்.

தந்தை—(நீ உன்) பிதாவையும், தாய்—மாதாவையும், பேண்—(எப்போதும் பூசித்துக்) காப்பாற்று.

உக. நன்றி மறவேல்.

நன்றி—(ஒருவர் உனக்குச் செய்த) உபகாரத்தை, மறவேல்—(நீ ஒருபோதும்) மறவாதே.

உஉ. பருவத்தே பயிர்செய்.

பயிர்—பயிர்களை, பருவத்தே—(அது அது விளையும்) பக்குவகாலத்திலே, செய்—(வேண்டும் முயற்சியிலே வழுவாமல்) இடு.

பயிருக்குவேண்டும் முயற்சிகளாவன, உழுதல், எரு இடுதல், களையிடுங்குதல், நீர் பாய்ச்சல், காத்தல் என்கிற ஐந்தும் ஆம்.

உந. மன்றுபறித் துண்ணேல்.

மன்று—தருமசபையிலே இருந்துகொண்டு, பறித்து-(வழக்குத்தீர்ப்புக்கு வரும் குடிகளுடைய பொருளைக்)கவர்ந்து, உண்ணேல்—நீ சீவனம்பண்ணாதே.

உச. இயல்பலா தனசெயேல்.

இயல்பு அலாதன—(தருமநூலுக்குப்) பொருந்தமல்லாதவைகளை, செயேல்—நீ செய்யாதே.

உரு. அரவ மாட்டேல்.

அரவம்—(நஞ்சையுடைய)பாம்புகளை, ஆட்டேல்—(நீ பிடித்து) ஆட்டாதே.

உசா. இலவம்பஞ் சிற்றுயில்.

இலவம்பஞ்சில் — இலவம் பஞ்சுமெத்தையிலே, துயில்—நீ நித்திரைசெய்.

உஎ. வஞ்சகம் பேசேல்.

வஞ்சகம்—கபடவார்த்தைகளை, பேசேல்—நீ பேசாதே.

உஅ. அ, ழகலா தனசெயேல்.

அழகு அலாதன—(நீ துன்பப்படவந்த காலத்தும்) இழிவுள்ள செயல்களை, செயேல்—செய்யாதே.

அழகுடையன உயர்வுள்ள செயல்கள் ஆதலால், அழக லாதன இழிவுள்ள செயல்கள் என்பதாம்.

உகூ. இ, ளமை யிற்கல்.

இளமையில்—இளமைப் பிராயத்திலே, கல்—(நீ வித்தையைக்) கற்றுக்கொள்.

௩0. அ, றனை மறவேல்.

அறனை—தருமத்தை, மறவேல்—(நீ ஒருபோதும்) மறவாதே.

௩க. அ, னந்த லாடேல்.

அனந்தல்—நித்திரையை, ஆடேல்—(நீ அதிகமா கச்) செய்யாதே.

௩உ. கடிவது மற.

கடிவது—(ஒருவரைச்) சினந்து பேசுவதை, மற—நீ மறந்துவிடு.

௩௩. காப்பது விரதம்.

காப்பது—(உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவைகளைக்) காப்பாற்றுவதே, விரதம்—விரதமாம்.

௫௪. கிழமைப் படவாழ்.

கிழமைப்பட—(உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கும்) உரிமைப் படும்படி, வாழ்—நீ வாழு.

௫௫. கீழ்மை யகற்று.

கீழ்மை—கீழ்மையாகிய குணத்தை, அகற்று—நீ நீக்கு.

௫௬. குணமது கைவிடேல்.

குணமது—(மேலாகிய) குணத்தை,கைவிடேல்—நீ கைவிடாதே.

௫௭. கூடிப் பிரியேல்.

கூடி—(நல்லவரோடு) சிநேகித்து, பிரியேல்—(நீ பின் அவரை விட்டு) நீங்காதே.

௫௮. கெடுப்ப தொழி.

கெடுப்பது—பிறருக்குக் கேடுசெய்வதை, ஒழி—நீ விட்டுவிடு.

௫௯. கேள்வி முயல்.

கேள்வி—(கற்றவர் சொல்லும் நூற்பொருளைக்) கேட்பதற்கு, முயல்—நீ முயற்சி செய்.

௬௦. கைவினை கரவேல்.

கைவினை—(உனக்குத் தெரிந்த) கைத்தொழிலை, கரவேல்—(நீ சமயத்திலே) ஒளியாதே.

௬௧. கொள்ளை விரும்பேல்.

கொள்ளை—(பிறருடைய பொருளைக்) கொள்ளையிடுதற்கு, விரும்பேல்—நீ ஆசைப்படாதே.

சஉ. கோதாட் டொழி.

கோது—குற்றம் பொருந்திய, ஆட்டு—விளையாட்டை, ஒழி—நீ நீக்கு.

சங. சக்கர நெறிநில்.

சக்கர நெறி—(அரசனுடைய ஆஞ்ஞையாகிய) சக்கரம் செல்லும் வழியிலே, நில்—(நீ அடங்கி) நில். [அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நட என்பது கருத்து.]

சச. சான்றோ ரினத்திரு.

சான்றோர் — அறிவினாலே நிறைந்தவர்களுடைய, இனத்து—கூட்டத்திலே, இரு—(நீ எந்நாளும் சேர்ந்து) இரு.

சரு. சித்திரம் பேசேல்.

சித்திரம்—மெய்போலத் தோன்றும் பொய்மொழிகளை, பேசேல்—நீ பேசாதே.

சசா. சீர்மை மறவேல்.

சீர்மை—புகழுக்கு ஏதுவாகிய குணத்தை, மறவேல்—நீ மறந்து விடாதே.

சஎ. சுளிக்கச் சொல்லேல்.

சுளிக்க—(கேட்பவர்) கோபிக்கும்படியாக, சொல்லேல்—(நீ ஒன்றையும்) பேசாதே.

சஅ. சூது விரும்பேல்.

சூது—சூதாட்டை, விரும்பேல்—(நீ ஒருபோதும்) விரும்பாதே.

௪௯. செய்வன திருந்தச்செய்.

செய்வன—செய்யுங்காரியங்களை, திருந்த—செவ்வையாக, செய்—நீ செய்.

௫0. சேரிட மறிந்துசேர்.

சேர் இடம்—அடையத்தகும்(நன்மையாகிய) இடத்தை, அறிந்து—தெரிந்து, சேர்—நீ அடை.

௫௧. சைசெனத் திரியேல்.

சை என—(பெரியோர் உன்னைச்) சீ என்று அருவருக்கும்படி, திரியேல்—(நீ துட்டனாய்த்) திரியாதே.

௫௨. சொற்சோர்வு படேல்.

சொல்—(நீ பிறரோடு பேசும்) சொற்களிலே, சோர்வு படேல்—மறதிபடப் பேசாதே. [சொல்லவேண்டுவதை மறவாமற்சொல் என்பது கருத்து.]

௫௩. சோம்பித் திரியேல்.

சோம்பி—(நீ செய்யவேண்டும் முயற்சியைச் செய்யாமல்) சோம்பல்கொண்டு, திரியேல்—(வீணாகத்) திரியாதே.

௫௪. தக்கோ னெனத்திரி.

தக்கோன் என—(உன்னைப் பெரியோர்கள்) யோக்கியன் என்று புகழும்படி, திரி—நீ திரி.

௫௫. தானமது விரும்பு.

தானமது—(சற்பாத்திரங்களிலே) தானஞ் செய்தலை, விரும்பு—நீ விரும்பு.

௫௬. திருமாலுக் கடிமைசெய்.

திருமாலுக்கு—விஷ்ணுவுக்கு, அடிமை செய்—நீ தொண்டு பண்ணு.

௫௭. தீவினை யகற்று.

தீவினை—பாவச்செயல்களை, அகற்று—(நீ செய்யாமல்) நீக்கு.

௫௮. துன்பத்திற் கிடங்கொடேல்.

துன்பத்திற்கு—(தொழில்செய்யும்போது முயற்சியினாலே வரும் சரீரப் பிரயாசத்தால் ஆகிய) துன்பத்துக்கு, இடம் கொடேல்—(நீ சிறிதாயினும்) இடங்கொடாதே. [அத்துன்பத்தை இன்பமென்று கொண்டு முயற்சியை விடாது செய் என்பது கருத்து.]

௫௯. தூக்கி வினைசெய்.

தூக்கி—(முடிக்கும் உபாயத்தை) ஆராய்ந்து, வினை—ஒருதொழிலை, செய்—(நீ அதன்பின்பு) செய்.

௬௦. தெய்வ மிகழேல்.

தெய்வம்—கடவுளை, இகழேல்—(நீ மறந்தாயினும்) இகழாதே.

௬௧. தேசத்தோ டொத்துவாழ்.

தேசத்தோடு—(நீவசிக்கும்) தேசத்திலுள்ளவர்களுடனே, ஒத்து—(பகையில்லாமல்) ஒத்து, வாழ்—வாழு.

௬௨. தையல்சொற் கேளேல்.

தையல்—(உன்) மனைவியுடைய, சொல்—சொல்லை, கேளேல்—நீ கேட்டு நடவாதே.

௬௩. தொன்மை மறவேல்.

தொன்மை—பழமையாகிய சிநேகத்தை, மறவேல்—நீ மறந்து விடாதே.

௬௪. தோற்பன தொடரேல்.

தோற்பன—தோல்வியடையக் கூடிய வழக்குகளிலே, தொடரேல்—நீ சம்பந்தப்படாதே.

௬௫. நன்மை கடைப்பிடி.

நன்மை—புண்ணியத்தையே, கடைப்பிடி—(நீவிடாமல்) உறுதியாகப்பிடி.

௬௬. நாடொப் பனசெய்.

நாடு—உன் நாட்டில் உள்ளோர் பலரும், ஒப்பன—ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை, செய்—நீ செய்.

௬௭. நிலையிற் பிரியேல்.

நிலையில்—(நீ நிற்கின்ற உயர்ந்த) நிலையிலே நின்று, பிரியேல்—(ஒருபோதும்) நீங்காதே.

௬௮. நீர்விளை யாடேல்.

நீர்—(ஆழம் உள்ள) நீரிலே, விளையாடேல்—(நீ நீந்தி) விளையாடாதே.

௬௯. நுண்மை நுகரேல்.

நுண்மை—(நோயைத் தருகிற) சிற்றுண்டிகளை, நுகரேல்—நீ உண்ணாதே.

௭௦. நூல்பல கல்.

நூல் பல—(அறிவை வளர்க்கிற) நூல்கள் பலவுந் தெறையும், கல்—நீ கற்றுக்கொள்.

எக. நெற்பயிர் விளை.

நெற்பயிர்—நெல்லுப்பயிரை, விளை—(நீ வேண்டிய முயற்சிசெய்து) விளைவி.

எஉ. நேர்பட வொழுகு.

நேர்பட—(உன் ஒழுக்கம் கோணாமல்) செவ்வைப் பட, ஒழுகு—நீ நட.

எங. நைவினை நணுகேல்.

நை—(பிறர்) கெடத்தக்க, வினை—தீவினைகளை, நணுகேல்—(நீ ஒருபோதும்) சாராதே.

எச. நொய்ய வுரையேல்.

நொய்ய—(பயன் இல்லாத) அற்பவார்த்தைகளை, உரையேல்—(நீ ஒருபோதும்) சொல்லாதே.

எரு. நோய்க் கிடங்கொடேல்.

நோய்க்கு-வியாதிகளுக்கு, இடங்கொடேல்-(அவபத்தியம் முதலானவைகளைச்செய்து)இடங்கொடாதே

எசு. பழிப்பன பகரேல்.

பழிப்பன—(அறிவுடையவர்களாலே)பழிக்கப்படுவனவாகிய இழிசொற்களை, பகரேல்—நீ பேசாதே.

இழிசொற்களாவன பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்கிற நான்குமாம்.

எஎ. பாம்பொடு பழகேல்.

பாம்பொடு—(பால்கொடுத்தவருக்கும் விஷத்தைக்

கொடுக்கிற) பாம்பைப் போல்பவர்களுடனே, பழ
கேல்—நீ சகவாசஞ் செய்யாதே.

எ௮. பிழைபடச் சொல்லேல்.

பிழைபட—வழுக்கள் உண்டாகும்படி, சொல்
லேல்—(நீ ஒன்றையும்) பேசாதே.

எ௯. பீடு பெறநில்.

பீடு—பெருமையை, பெற—பெறும்படியாக, நில்
(நீ நல்லவழியிலே) நில்

அ௦. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்.

புகழ்ந்தாரை—உன்னைத் துதிசெய்து அடுத்தவரை,
போற்றி—(கைவிடாமற்)காப்பாற்றி,வாழ்—நீ வாழு.

அ௧. பூமி திருத்தியுண்.

பூமி—உன் விளைநிலத்தை, திருத்தி—சீர்திருத்திப்
பயிர்செய்து, உண்—நீ உண்ணு.

அ௨. பெரியாரைத் துணைக்கொள்.

பெரியாரை—(அறிவிலே சிறந்த) பெரியோரை, து
ணைக்கொள்—உனக்குத் துணையாகப்பேணிக்கொள்

அ௩. பேதைமை யகற்று.

பேதைமை—(பிறவிக்குக்காரணமாகிய) அஞ்ஞான
த்தை,அகற்று—(நீ மெய்ஞ்ஞானத்தினாலே)போக்கு.

அ௪. பையலோ டிணங்கேல்.

பையலோடு—சிறுபிள்ளையோடு, இணங்கேல்—நீ
கூடாதே.

அ௫. பொருடனைப் போற்றிவாழ்.

பொருள் தனை—திரவியத்தை, போற்றி—(மேன் மேலும் உயரும்படி) காத்து, வாழ்—நீ வாழு.

௮௬. போர்த்தொழில் புரியேல்.

போர்—சண்டையாகிய, தொழில்—தொழிலை, புரியேல்—நீ செய்யாதே.

௮௭. மனந்தடு மாறேல்.

மனம்—மனசு, தடுமாறேல்—(யாதொருவிஷயத்திலும்) கலங்காதே.

௮௮. மாற்றானுக் கிடங்கொடேல்.

மாற்றானுக்கு—பகைவனுக்கு, இடம் கொடேல்—(உன்னை நெருக்கிப் பின் வருத்தும்படியாக நீ) இடங் கொடாதே.

௮௯. மிகைபடச் சொல்லேல்.

மிகை பட—(சொற்கள் சுருங்காமல்) அதிகப்படும் படி, சொல்லேல்—நீ சொல்லாதே.

௯௦. மீதூண் விரும்பேல்.

மீது ஊண்—அதிக போசனத்துக்கு, விரும்பேல்—நீ ஆசைப்படாதே.

௯௧. முனைமுகத்து நில்லேல்.

முனைமுகத்து—சண்டைமுகத்திலே, நில்லேல்—(நீ போய்) நில்லாதே.

௯௨. மூர்க்கரோ டிணங்கேல்.

மூர்க்கரோடு—அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல்—நீ சிநேகம் பண்ணாதே.

கொடுக்கிற) பாம்பைப் போல்பவர்களுடனே, பழ கேல்—நீ சகவாசஞ் செய்யாதே.

எஅ. பிழைபடச் சொல்லேல்.

பிழைபட—வழுக்கள் உண்டாகும்படி, சொல் லேல்—(நீ ஒன்றையும்) பேசாதே.

எகூ. பீடு பெறநில்.

பீடு—பெருமையை, பெற—பெறும்படியாக, நில் (நீ நல்லவழியிலே) நில்

அ0. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்.

புகழ்ந்தாரை—உன்னைத் துதிசெய்து அடுத்தவரை, போற்றி—(கைவிடாமற்)காப்பாற்றி,வாழ்—நீ வாழு.

அக. பூமி திருத்தியுண்.

பூமி—உன் விளைநிலத்தை, திருத்தி—சீர்திருத்திப் பயிர்செய்து, உண்—நீ உண்ணு.

அஉ. பெரியாரைத் துணைக்கொள்.

பெரியாரை—(அறிவிலே சிறந்த) பெரியோரை, து ணைக்கொள்—உனக்குத் துணையாகப் பேணிக்கொள்

அங. பேதைமை யகற்று.

பேதைமை—(பிறவிக்குக் காரணமாகிய) அஞ்ஞான த்தை,அகற்று—(நீ மெய்ஞ்ஞானத்தினாலே)போக்கு.

அச. பையலோ டிணங்கேல்.

பையலோடு—சிறுபிள்ளையோடு, இணங்கேல்—நீ கூடாதே.

அரு. பொருடனைப் போற்றிவாழ்.

பொருள் தனை—திரவியத்தை, போற்றி—(மேன்மேலும் உயரும்படி) காத்து, வாழ்—நீ வாழு.

அ௬. போர்த்தொழில் புரியேல்.

போர்—சண்டையாகிய, தொழில்—தொழிலே, புரியேல்—நீ செய்யாதே.

அ௭. மனந்தடு மாறேல்.

மனம்—மனசு, தடுமாறேல்—(யாதொருவிஷயத்திலும்) கலங்காதே.

அ௮. மாற்றானுக் கிடங்கொடேல்.

மாற்றானுக்கு—பகைவனுக்கு, இடம் கொடேல்—(உன்னை நெருக்கிப் பின் வருத்தும்படியாக நீ)இடங்கொடாதே.

அ௯. மிகைபடச் சொல்லேல்.

மிகை பட—(சொற்கள் சுருங்காமல்) அதிகப்படும்படி, சொல்லேல்—நீ சொல்லாதே.

௯0. மீதூண் விரும்பேல்.

மீது ஊண்—அதிக போசனத்துக்கு, விரும்பேல்—நீ ஆசைப்படாதே.

௯௧. முனைமுகத்து நில்லேல்.

முனைமுகத்து—சண்டைமுகத்திலே, நில்லேல்—(நீ போய்) நில்லாதே.

௯௨. மூர்க்கரோ டிணங்கேல்.

மூர்க்கரோடு—அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல்—நீ சிநேகம் பண்ணாதே.

௯௩. மெல்லினல்லா டோள்சேர்.

மெல்—மெல்லிய, இல்—(உன்) மனையாட்டியாகிய நல்லாள்—பெண்ணினுடைய, தோள்—தோள்களை யே, சேர்—நீ புணர்.

இதனாலே, பிறர்மனைவியர் பரத்தையர் என்கிற இவர் களுடைய தோள்களை ஒருபோதும் புணராதே என்பது பெறப்படும்.

௯௪. மேன்மக்கள் சொற்கேள்.

மேன்மக்கள்—மேன்மையாகிய மனிதருடைய, சொல்—சொல்லை, கேள்—(நீ கேட்டு) நட.

௯௫. மைவிழியார் மனையகல்.

மை விழியார்—மை தீட்டிய கண்களையுடைய வேசி களது, மனை—வீட்டை, அகல்—(நீ ஒருபோதும் கிட் டாமல்) அகன்று போ

௯௬. மொழிவ தறமொழி.

மொழிவது—சொல்லப்படும்பொருளை, அற—(சந் தேகம்) நீங்கும்படி, மொழி—நீ சொல்லு.

௯௭. மோகத்தை முனி.

மோகத்தை — (நிலையாத பொருள்களின் மேலதா கிய) ஆசையை, முனி—நீ கோபித்து விலக்கு.

௯௮. வல்லமை பேசேல்.

வல்லமை—(உன்னுடைய) சாமர்த்தியத்தை, பே சேல்—(நீ புகழ்ந்து) பேசாதே.

கூகூ. வாதுமுற் கூறேல்.

வாது—வாதுகளை, முன்—(பெரியோர்) முன்னே கூறேல்—நீ பேசாதே.

க00. வித்தை விரும்பு.

வித்தை—கல்விப்பொருளையே, விரும்பு—நீவிரும்பு.

க0க. வீடு பெறநில்.

வீடு—மோக்ஷத்தை, பெற—அடையும்படி, நில்—(அதற்குரிய ஞானவழியிலே) நில்.

க0உ. உத்தம னாயிரு.

உத்தமனாய்—(நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரிலும்) மேலானவனாகி, இரு—நீ இரு.

க0ங. ஊருடன் கூடிவாழ்.

ஊருடன்—ஊரவர்களுடனே, கூடி—(சுபாசுபகன்மங்களிலே) அளாவி, வாழ்—நீ வாழு.

க0ச. வெட்டெனப் பேசேல்.

வெட்டு என—கத்திவெட்டைப்போல,பேசேல்—(நீ ஒருவரோடுங் கடினமாகப்) பேசாதே.

க0ரு. வேண்டி வினைசெயேல்.

வேண்டி—(யாதொரு பிரயோசனத்தை) விரும்பி, வினை — தீவினையை, செயேல்—(நீ ஒருவருக்கும்) செய்யாதே.

க0சு. வைகறைத் துயிலெழு.

வைகறை—(நீ தினந்தோறும்) விடியற்காலத்திலே துயில்—நித்திரையை விட்டு, எழு—எழுந்திரு.

கOஎ. ஒன்னாரைத் தேறேல்.

ஒன்னாரை—பகைவர்களை, தேறேல்—(நீ ஒருபோதும்) நம்பாதே.

கOஅ. ஓரஞ் சொல்லேல்.

ஓரம்—பக்ஷபாதத்தை, சொல்லேல்—(நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே.

ஆத்திசூடியுரை முற்றிற்று.

உ

ஔவையார் அருளிச்செய்த

கொன்றைவேந்தன்

மூலமும் உரையும்.

காப்பு.

கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோ மியாமே.

இதன்பொருள்.

கொன்றை—கொன்றைப்பூமாலையைச் சூடிய, வேந்தன்—சிவபெருமானுக்கு, செல்வன்—குமாரராகிய விநாயகக்கடவுளுடைய, அடி இணை—பாதங்களிரண்டையும், என்றும்—எந்நாளும், ஏத்தி—துதிசெய்து, தொழுவோம்—வணங்குவோம், யாம்—நாங்கள் என்றவாறு. ஏகாரம் ஈற்றசை.

சூத்திரம்.

க. அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்.

அன்னையும்—தாயும், பிதாவும்—தகப்பனும், முன்—முன்னே, அறி—காணப்பட்ட, தெய்வம்—தெய்வங்களாவார்.

உ. ஆலயந் தொழுவது சாலவு நன்று.

ஆலயம்—கோயிலுக்குப்போய், தொழுவது—கடவுளை வணங்குவது, சாலவும்—மிகவும், நன்று—நல்லது.

௩. இல்லற மல்லது நல்லற மன்று.

இல்லறம்—(மனையாளோடு கூடிச் செய்யும்) இல்லறமானது, நல் அறம்—எளிதிற் செய்யத்தகும் அறமாகும், அல்லது—இல்லறமல்லாத துறவறமானது, அன்று—எளிதிற்செய்யத்தகும் அறமன்றாகும்.

ச. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

ஈயார்—கொடாதவருடைய, தேட்டை—சம்பாத்தியத்தை, தீயார்—(கள்ளர் முதலாகிய) தீயவர், கொள்வர்—அபகரிப்பார்.

ரு. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு.

உண்டி — போசனம், சுருங்குதல் — (அளவிற்) குறைதல், பெண்டிர்க்கு—பெண்டுகளுக்கு, அழகு—அழகாகும்.

சா. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

ஊருடன்—(தான் இருக்கும்) ஊராருடன், பகைக்கின்—(ஒருவன்) விரோதித்தால், வேருடன்—(தன்) வமிசத்துடன், கெடும்—(அவன்) கெடுவான்.

எ. எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்.

எண்ணும்—கணிதநூலும், எழுத்தும்—இலக்கண நூலும், கண் எனத் தகும்—(மனிதருக்கு) இரண்டு கண்களென்று சொல்லப்படும்.

அ. ஏவா மக்கண் மூவா மருந்து.

ஏவா—(பெற்றவர் இதைச் செய் என்று) ஏவுதற்கு முன் குறிப்பறிந்து செய்கிற, மக்கள்—பிள்ளைகள், மூவா மருந்து—(அப்பெற்றவருக்குத்) தேவாமிர்தம் போல்வார்.

கூ. ஐயம் புகினுஞ் செய்வன செய்.

ஐயம் புகினும் — பிச்சையெடுத்தாலும், செய்வன—செய்யத்தகுங் கருமங்களையே, செய்—(நீ விடாது) செய்.

க0. ஒருவனைப் பற்றி யோரகத் திரு.

ஒருவனை—(நற்குணமுடைய) ஒருவனை, பற்றி—(துணையாகப்) பற்றிக்கொண்டு, ஓரகத்து—ஓரிடத்திலேதானே, இரு—(நீ எப்போதும்) வாசம்பண்ணு.

கக. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்.

வேதியர்க்கு—பிராமணருக்கு, ஒழுக்கம்—ஆசாரமானது, ஓதலின்—(வேதம்) ஓதலினும், நன்றே—நல்லதே.

கஉ. ஔவியம் பேசுத லாக்கத்திற் கழிவு.

ஔவியம்—பொறாமை வார்த்தைகளை, பேசுதல்—(ஒருவன்) பேசுதல், ஆக்கத்திற்கு—(அவன்) செல்வத்திற்கு, அழிவு—கேட்டைத் தருவதாகும்.

கங. அஃகமுங் காசுஞ் சிக்கெனத் தேடு.

அஃகமும்—தானியத்தையும், காசும் — திரவியத்தையும், சிக்கெனத் தேடு—நீ வீண்செலவுசெய்யாமற் சம்பாதி.

கச. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.

கற்பு எனப்படுவது — (பெண்களுக்குக்) கற்பென்று சொல்லப்படுவது, சொல்—(கணவர்) சொல்லுக்கு, திறம்பாமை— தப்பி நடவாமையாம்.

கரு. காவ லானே பாவையர்க் கழகு.

காவல் தானே—(கற்புக்கு அழிவு வராமல் தம்மைக்) காத்துக்கொள்வது தானே, பாவையர்க்கு—பெண்களுக்கு, அழகு—அழகாகும்.

கசா. கிட்டா தாயின் வெட்டென மற.

கிட்டாது ஆயின்—(இச்சித்த ஒருபொருள்) கிடையாதானால், வெட்டென—சீக்கிரத்திலேதானே, மற—(அப்பொருளை) மறந்துவிடு.

கஎ. கீழோ ராயினுந் தாழ வுரை.

கீழோர் ஆயினும்—(கேட்பவர் உனக்குக்)கீழ்ப்பட்டவராய் இருந்தாலும், தாழ—(உன்சொல்)வணக்கமுடையதாய் இருக்கும்படி, உரை—(நீ அவருடன்)பேசு.

கஅ. குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை.

குற்றம்—குற்றங்களை, பார்க்கின் — (ஆராய்ந்து) பார்த்தால், சுற்றம்—உறவாவோர், இல்லை—(ஒருவரும்) இல்லை.

௧௯. கூரம் பாயினும் வீரியம் பேசேல்.

கூர் அம்பு ஆயினும்—(உன் கையிலிருக்கிறது) கூர்மை பொருந்திய அம்பானாலும், வீரியம்—வீரத்தன்மையை, பேசேல்—(நீ வீணாகப்) பேசாதே.

௨௦. கெடுவது செய்யின் விடுவது கருமம்.

கெடுவது—கெடுவதை, செய்யின் (தன் சினேகன்) செய்தால், விடுவது—(அவன் சினேகத்தை) விடுவதே, கருமம்—(விவேகிக்கு) நற்செய்கையாம்.

௨௧. கேட்டி லுறுதி கூட்டு முடைமை

கேட்டில்—(கைப்பொருள்) இழந்தகாலத்தில், உறுதி—மனந்தளராமை, உடைமை—முன் போல அப்பொருளுடையனாந்தன்மையை, கூட்டும்—சேர்க்கும்.

௨௨. கைப்பொருடன்னின் மெய்ப்பொருள்கல்வி.

கைப்பொருள் தன்னின்—கையிலிருக்கிற பொருளைப்பார்க்கிலும், மெய்ப்பொருள்—மெய்ப்பொருளாவது, கல்வி—கல்வியேயாம்

௨௩. கொற்றவ னறித லுற்றிடத் துதவி.

கொற்றவன்—அரசனானவன், அறிதல்—(ஒருவனை) அறிந்திருத்தல், உற்ற இடத்து—(அவனுக்கு ஆபத்து) வந்த இடத்து, உதவி—உதவியாகும்,

௨௪. கோட்செவிக் குறளை காற்றுட னெருப்பு.

கோட்செவி—கோள்கேட்குங் குணத்தோனுடைய காதிலே, குறளை—(பிறர்மேல் ஒருவன் வந்து

சொன்ன) கோளானது, காற்றுடன்—காற்றுடன் சேர்ந்த, நெருப்பு—நெருப்பைப்போல மூளும்.

உரு. கௌவை சொல்லி னெவ்வருக்கும் பகை.

கௌவை—(பிறர்மேலே) பழிச்சொல்லுகளை, சொல்லின்—(ஒருவன்) சொல்லினால், எவ்வருக்கும், எல்லாருக்கும் பகை—(அவன்) பகையாவான்.

உசா. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை.

சந்ததிக்கு—தன் வமிசம் பெருகுதற்கு, அழகு—அழகாவது, வந்தி—மலடியாக, செய்யாமை—செய்யாமல்(தன் மனையாளோடு) கூடி வாழ்தலாம்

உஎ. சான்றோ ரென்கை யீன்றோட் கழகு.

சான்றோர் என்கை—(தன் புத்திரரைக் கல்வியறிவால்) நிறைந்தோர் என்று (கற்றவர்)சொல்லுகிறது, ஈன்றோட்கு—பெற்றவளுக்கு, அழகு—அழகாகும்.

உஅ. சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு.

சிவத்தை—(முதற்பொருளாகிய) பரமசிவத்தை, பேணின்—(ஒருவன்) வழிபட்டால், தவத்திற்கு—(அவன் செய்யுந்) தவத்திற்கு, அழகு—அழகாகும்.

உகூ. சீரைத் தேடி னேரைத் தேடு.

சீரை—சௌக்கியத்தை,தேடின்—(உனக்குத்)தேடுவாயானால், ஏரை—பயிரிடுந்தொழிலை,தேடு—நீ தேடிக்கொள்ளு.

௩௦. சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்.

சுற்றத்திற்கு—உறவினருக்கு,அழகு—அழகாவது,

சூழ—(சபாசபைகளிலே பலரும் வந்து) சூழ, இருத்தல்—(சமீபங்களிலே) குடியிருக்கையாகும்.

௩௧. சூதும் வாதும் வேதனை செய்யும்.

சூதும்-சூதாடுதலும், வாதும்-தருக்கம்பேசுதலும், வேதனை—வருத்தத்தை, செய்யும்—உண்டாக்கும்.

௩௨. செய்தவ மறந்தாற் கைதவ மாளும்.

செய்தவம்—செய்யுந்தவத்தை, மறந்தால்—(ஒருவன்) மறந்தால், கைதவம்—பொய்யாகிய அஞ்ஞானமானது, ஆளும்—(அவனை அடிமைகொண்டு) ஆளும்.

௩௩. சேமம் புகினும் யாமத் துறங்கு.

சேமம்—காவற்கூடத்திலே புகினும்—போய்(ஒரு வேலையும் இல்லாமல்) இருந்தாலும், யாமத்து-ஏழரை நாழிகைக்குப்பின், உறங்கு—நித்திரை பண்ணு.

௩௪. சையொத் திருந்தா லையமிட் டுண்.

சை ஒத்து இருந்தால்—பொருள் ஒத்திருந்தால், ஐயம் இட்டு—பிச்சை இட்டு, உண்—நீயும் உண்ணு.

சை - பொருள்.

௩௫. சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்.

சொக்கர் என்பவர்-பொன்னுடையவர் என்றுசொல்லப்படுவோர், அத்தம்-(அறமும் இன்பமுமாகிய மற்றைப்) புருஷார்த்தங்களையும், பெறுவர்—பெறுவார்.

சொக்கு - பொன்.

௩௬. சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.

சோம்பர் என்பவர்—சோம்பலுடையவர் என்று

சொல்லப்படுவோர், தேம்பி—(வறுமையினால்) வருந்தி, திரிவர்—(இரந்து) திரிவார்.

௩௭. தந்தைசொன் மிக்க மந்திர மில்லை.

தந்தை—பிதாவினுடைய, சொல்—சொல்லுக்கு, மிக்க-மேற்பட்ட, மந்திரம்-(பலனைத்தரும்) மந்திரமானது, இல்லை—(ஒருவனுக்கு எந்தநூலிலும்) இல்லை.

௩௮. தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை.

தாயின்—மாதாவைப்பார்க்கிலும், சிறந்த-சிறப்புப் பொருந்திய, ஒருகோயிலும்—ஒரு ஆலயமும், இல்லை—(ஒருவனுக்கு எங்கும்) இல்லை.

௩௯. திரைகட லோடியுந் திரவியந் தேடு.

திரை கடல்—அலைகின்ற கடலிலே, ஓடியும்—(தோணியேறித் தூரதேசங்களிற்) போயானாலும், திரவியம்—திரவியத்தை, தேடு—நீ சம்பாதி.

௪௦. தீராக் கோபம் போரா முடியும்.

தீரா—நீங்காத, கோபம்—கோபமானது, போரா—(பின்பு) சண்டையாக, முடியும்—முடிந்துவிடும்.

௪௧. துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு.

துடியா-(தங்கணவருக்குத் துன்பம் வந்தபோது) மனம் பதையாத, பெண்டிர்—பெண்கள், மடியில்—(அவர்) வயிற்றில், நெருப்பு—அக்கினிக்கு ஒப்பாவார்.

௪௨. தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்.

தூற்றும் — (தங்கணவர்மேற் குற்றஞ்சொல்லித்) தூற்றுகிற, பெண்டிர்—பெண்களை, கூற்று எனத் தகும்—(அவருக்கு) இயமன் என்று எண்ணத்தகும்.

௬௩. தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்.

தெய்வம்—தெய்வமானது, சீறின்—(ஒருவனைக்) கோபித்தால், கைதவம்—(அவனுக்குக்) கைகூடியிருந்த தவமும், மாளும்—(பயன்கொடாமல்) அழியும்.

௬௪. தேடா தழிக்கிற் பாடா முடியும்.

தேடாது—(ஒருவன் வருந்திச்) சம்பாதியாமல், அழிக்கின்—(இருக்கிறபொருளைச்) செலவழித்தால், பாடாமுடியும்— (அவனுக்குப் பின்) வருத்தமாக முடியும்.

௬௫. தையு மாசியும் வையகத் துறங்கு.

தையும்—தைமாதத்திலும், மாசியும்—மாசிமாதத்திலும், வை அகத்து—(பனிவருத்தந்தாராத) வைக்கோல்வீட்டிலே, உறங்கு—நித்திரைபண்ணு.

௬௬. தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது.

தொழுது—(ஒருவரைச்) சேவித்து, ஊண்—உண்ணும் உணவினது, சுவையின்—சுவையைப்பார்க்கிலும், உழுது—உழுது பயிர்செய்து, ஊண்—உண்ணும் உணவின் சுவை, இனிது—இன்பந்தருவதாகும்.

௬௭. தோழ னோடு மேழைமை பேசேல்.

தோழனோடும்—(உன்) சினேகனேயாயினும், ஏழைமை—(உனக்கு இருக்கிற) சிறுமையை, பேசேல்— (நீ எப்படிப்பட்ட வேளையிலும்) பேசாதே.

௬அ. நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்.

நல் இணக்கம் அல்லது—நல்ல சகவாசம் அல்லா

தது, அல்லல் — துன்பத்தையே, படுத்தும் — உண்டாக்கும்.

௪௯. நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.

நாடு எங்கும்—தேசமெங்கும், வாழ—செழித்திருக்குமாயின், கேடு ஒன்றும் — (திருட்டு முதலாகிய) கேடொன்றும், இல்லை—இல்லை.

௫௦. நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை.

நிற்க—(தன்னிடத்தே) நிலைபெறும்படி, கற்றல்—கற்றலாவது, சொல்—(தான் சொல்லும்) சொல்லுகளிலே, திறம்பாமை—(ஒருபோதும்) தப்பிப்போகாமையாம்.

௫௧. நீரகம் பொருந்திய வூரகத் திரு.

நீர்—நீர்வளமானது, அகம்—தனக்குள்ளே, பொருந்திய—(மழையில்லாத பஞ்சத்திலும்) அமைந்த, ஊரகத்து—ஊரினிடத்திலே, இரு—நீ குடியிரு.

௫௨. நுண்ணிய கருமமு மெண்ணித் துணி.

நுண்ணிய—சிறிய, கருமமும்—தொழிலையும், எண்ணி—(முடிக்கும் வழியை நன்றாக) ஆலோசித்து, துணி—(நீ பின்பு அதைச்) செய்யத் துணி.

௫௩. நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.

நூல் — தருமநூலிலே சொல்லப்பட்ட, முறை—(விதிகளின்) முறையை, தெரிந்து—அறிந்து, சீலத்து—நல்லொழுக்கவழியில், ஒழுகு—நீ நட.

௫௪. நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை.

நெஞ்சை—(தம்முடைய) மனசுக்கு, ஒளித்த—

மறைக்கப்பட்ட, ஒருவஞ்சகம்—யாதொருவஞ்சனையும், இல்லை—(யாவரிடத்திலும்) இல்லை.

௫௫. நேரா நோன்பு சீரா காது.

நேரா—(மனசினால்) உடன்படாத, நோன்பு—தவமானது, சீர் ஆகாது—சீராக முடியாது.

௫௬. நைபவ ரெனினு நொய்ய வுரையேல்.

நைபவர் எனினும்—(கேட்போர் எதிர்பேசாமல்) வருந்துவோராயினும், நொய்ய — அற்பவார்த்தைகளை, உரையேல்—நீ சொல்லாதே.

௫௭. நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவர்.

நொய்யவர் என்பவர்—(உருவத்தினாலே) சிறியவர் என்று இகழப்படுவோரும், வெய்யவர் ஆவர்—செய்காரியத்தால் யாவரும் விரும்புங் குணத்தையுடையவராவர்.

௫௮. நோன் பென்பதுவே கொன்று தின்னாமை.

நோன்பு என்பது—தவமென்று சொல்லப்படுவது, கொன்று—(ஒருசீவனை) வதைசெய்து, தின்னாமையே—(அதன்மாமிசத்தைத்) தின்னாமையேயாம்.

௫௯. பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்.

பண்ணிய—(ஒருவன்) செய்த, பயிரின்—பயிரின் விளைவினாலும் விளைவில்லாமையினாலும், புண்ணியம்—(அவனிடத்தே) புண்ணியம் இருத்தலும் இல்லாமையும், தெரியும்— அறியப்படும்.

௬0. பாலோ டாயினும் கால மறிந்துண்.

பாலோடு ஆயினும்—பாலோடு கூடிய அன்னத்தை உண்டாலும், காலம் அறிந்து—(உண்ணத்தகுந்) காலத்தை அறிந்து, உண்—(நீ அதை) உண்ணு.

௬௧. பிறன்மனை புகாமை யறமெனத் தகும்.

பிறன்—பிறனுடைய, மனை—மனையாளிடத்தில், புகாமை—(இச்சித்துப்) போகாமையே, அறம் எனத் தகும்—(எல்லாத்தருமங்களினும் உயர்ந்த) தருமம் என்று சொல்லத்தகும்.

௬௨. பீரம் பேணி பாரந் தாங்கும்.

பீரம் பேணி—முலைப்பால் குறைவற உண்டு வளர்ந்தவன், பாரம்—பாரமான சுமையை, தாங்கும்—சுமப்பான். [அதுபோல முன்னே காரணங்களைக் குறைவறக் கொண்டவன் பின்னே பெரிய காரியங்களையும் வருத்தமின்றி முடிப்பான்.]

பீர்-முலைப்பால். அம் சாரியை.

௬௩. புலையுங் கொலையுங் களவுந் தவிர்.

புலையும்—புலாலுண்ணுதலையும், கொலையும்—சீவவதை செய்தலையும், களவும்—பிறர்பொருளைத் திருடுதலையும், தவிர்—(நீ செய்யாது) ஒழித்துவிடு.

௬௪. பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்.

பூரியோர்க்கு—கீழ்மக்களுக்கு, சீரிய—சிறப்பாகிய, ஒழுக்கம்—நடையானது, இல்லை—(உண்டாதல்) இல்லை.

௬௫. பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்.

பெற்றோர்க்கு—(மெய்ஞ்ஞானத்தைப்) பெற்றவருக்கு, சுற்றமும்—உறவினர்மேல் ஆசையும், சினமும்—(மற்றவர்மேல்) வெறுப்பும், இல்லை—இல்லை.

௬௬. பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்.

பேதைமை என்பது—அறியாமையென்று சொல்லப்படுங் குணமானது, மாதர்க்கு—பெண்களுக்கு, அணிகலம்—ஆபரணமாகும்.

௬௭. பையச் சென்றால் வையந் தாங்கும்.

பைய—மெள்ள, சென்றால்—(ஒருவன் தகுதியான வழியிலே) நடந்தால், வையம்—பூமியிலுள்ளோர், தாங்கும்—(அவனை) மேலாகக் கொள்வார்.

௬௮. பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.

பொல்லாங்கு என்பவை—தீங்குகளென்று சொல்லப்பட்டவைகளாகிய, எல்லாம்—எல்லாவற்றையும், தவிர்—(நீ செய்யாது) ஒழித்துவிடு.

௬௯. போனக மென்பது தானுழந் துண்டல்.

போனகம் என்பது—போசனமென்று சொல்லப்படுவது, தான் உழந்து—தான் பிரயாசப்பட்டுச் சம்பாதித்து, உண்டல்—உண்ணுதலாம்.

௭௦. மருந்தே யாயினும் விருந்தோ டுண்.

மருந்தே ஆயினும்—(உண்ணப்படுவது கிடைத்தற்கு அரிய) தேவாமிர்தமேயானாலும், விருந்தோடு—(வந்த) விருந்தாளிகளோடு கூடி, உண்—நீ உண்ணு.

எக. மாரியல்லது காரிய மில்லை.

மாரி அல்லது—மழையினால் அல்லாமல், காரியம்—யாதொரு காரியமும், இல்லை—(யாருக்கும் நடப்பது) இல்லை.

எஉ. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.

மின்னுக்கு எல்லாம்—(வானத்திலே காணப்பட்ட) மின்னலுக்கு எல்லாம், பின்னுக்கு மழை—(அப்போது மழை யில்லையாயினும்) பின்னே மழை உண்டாகும். [அதுபோல ஒருவனிடத்திலே காணப்பட்ட நல்ல முயற்சிகளுக்கெல்லாம் அப்போது பயன் இல்லையாயினும் பின்னே பயன் உண்டாகும்.]

எஙு. மீகாம னில்லா மரக்கல மோடாது.

மீகாமன்—(தன்னை ஓட்டத்தக்க) மாலுமி, இல்லா—இல்லாத, மரக்கலம்—தோணியானது, ஓடாது—(கடலிலே செவ்வையாக) ஓடாது. [அதுபோலத் தன்னை முடிக்கத்தக்கவன் இல்லாத யாதொரு கருமமும் செவ்வையாக முடியாது.]

எச. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.

முற்பகல்—ஒருமுகூர்த்தகாலத்தின் முன்பங்கிலே செய்யின்—(பிறனுக்குத் தீங்கு) செய்தால், பிற்பகல் அதன் பின்பங்கிலே, விளையும்—(செய்தவனுக்கு அத் தீங்கு தானே) உண்டாகும்.

பகல் - முகூர்த்தம்.

எரு. மூத்தோர் சொன்ன வார்த்தையமிர்தம்.

மூத்தோர் —(கல்வியறிவினாலே) முதிர்ந்தவர், சொ

ன்ன—சொல்லிய, வார்த்தை — வார்த்தையானது, அமிர்தம்—தேவாமிர்தத்தைப்போலும்.

எசு. மெத்தையிற் படுத்த னித்திரைக் கழகு.

மெத்தையில்—பஞ்சணையிலே, படுத்தல்—படுத்த லானது, நித்திரைக்கு—(ஒருவன் செய்கிற) நித்திரைக்கு, அழகு—அழகாகும்.

எஎ. மேழிச் செல்வங் கோழை படாது.

மேழி—கலப்பை பிடித்து உழுது பயிர்செய்தலால் உண்டாகுகின்ற, செல்வம்—செல்வமானது, கோழை படாது—(ஒருபோதும்) குறைவை அடையாது.

எஅ. மைவிழி யார்தம் மனையகன் றொழுகு.

மை விழியார்தம்—மை தீட்டிய கண்ணையுடைய வேசிகளது, மனை—வீடுகளை, அகன்று ஒழுகு—நீ அணுகாமலே விலகிப் போ.

எசு. மொழிவது மறுக்கி னழிவது கருமம்.

மொழிவது—(கற்றோர்) சொல்லுகின்ற உபாயத்தை, மறுக்கின்—கேளாமற் செய்தால், கருமம்—(ஒருவன்செய்யுந்) தொழில், அழிவது—கெடுவதாகும்.

அ०. மோன மென்பது ஞான வரம்பு.

மோனம் என்பது—மௌனநிலை என்பது, ஞானம்—மெய்ஞ்ஞானத்துக்கு, வரம்பு—எல்லையாகும்.

அக. வளவ னாயினு மளவறிந் தழித்துண்.

வளவன் ஆயினும்—(சம்பத்திலே) சோழனுக்கு ஒப்பானவனாய் இருந்தாயானாலும், அளவு—(பொரு

ள்வரவின்) அளவை, அறிந்து—தெரிந்து, அழித்து—செலவழித்து, உண்—நீ அனுபவி.

அஉ. வானஞ் சுருங்கிற் றானஞ் சுருங்கும்.

வானம்—மழையானது, சுருங்கின்—பெய்தல் குறையுமாயின், தானம்—(சற்பாத்திரங்களுக்குக் கொடுக்கிற) கொடையும், சுருங்கும்—குறைவுபடும்.

அங. விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்.

விருந்து இலோர்க்கு—விருந்தினரை உபசரித்தல் இல்லாதவருக்கு, பொருந்திய—தாம் பொருந்திய, ஒழுக்கம்—இல்லறம், இல்லை—(இருந்ததாயினும்) இல்லாததற்குச் சமானமாகும்.

அச. வீரன் கேண்மை கூரம் பாகும்.

வீரன்—வீரனுடைய, கேண்மை—சிநேகம் ஒருவனுக்கு இருந்தால், கூர் அம்பு ஆகும்—(அவனுக்கு அதுவே தன் பகையை வெல்லுதற்குக்) கூர்மைபொருந்திய அம்பாகும்.

அரு. உரவோ ரென்கை யிரவா திருத்தல்.

உரவோர் என்கை—வல்லவரென்று சொல்லப்படுதல், இரவாது—(தமக்குச் சிறுமை வந்த காலத்திலும் பிறரை) இரவாமல், இருத்தல்—இருக்கையாம்.

அசா. ஊக்க முடைமை யாக்கத்திற் கழகு.

ஊக்கம்—(செய்தொழிலிலே) மனந்தளராமையை உடைமை—(ஒருவன்) உடையனாதல், ஆக்கத்திற்கு (அவன்) செல்வத்திற்கு, அழகு—அழகாகும்.

அஎ. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.

வெள்ளைக்கு—களங்கமில்லாத பரிசுத்த குணமுடையவனிடத்து, கள்ளம்—வஞ்சனை பொருந்திய, சிந்தை—நினைப்பானது, இல்லை—இல்லை.

அஅ. வேந்தன் சீறி னாந்துணை யில்லை.

வேந்தன்—அரசனானவன், சீறின்—(ஒருவனைக்) கோபித்தால், ஆம்—(அப்போது அவனுக்கு உபயோகம்) ஆகின்ற, துணை—துணை, இல்லை—(ஒருவரும்) இல்லை.

அசு. வையந் தோறுந் தெய்வந் தொழு.

வையம் தோறும் — பூமியிலுள்ள தலந்தோறும் (போய்,) தெய்வம்—கடவுளை, தொழு—(நீ தரிசித்து) வணங்கு.

கூ0. ஒத்த விடத்து நித்திரை கொள்.

ஒத்த இடத்து—(மேடுபள்ளம் இல்லாமற்) சமமான இடத்திலே, நித்திரை கொள்—(நீ படுத்து) நித்திரை பண்ணு.

கூக. ஓதாதார்க் கில்லை யுணர்வொடு மொழுக்கம்.

ஓதாதார்க்கு—(அறிவுநூல்களைப்) படியாதவருக்கு, உணர்வொடும்—அறிவுடனே, ஒழுக்கம்—நல்லநடையும், இல்லை—(உண்டாதல்) இல்லை.

கொன்றைவேந்தனுரை

முற்றுப்பெற்றது.

அநுபந்தம்.

கடிதம் எழுதுகிற முறை.

தகப்பனுக்கு மகன் எழுதல்.

மகா கனம்பொருந்திய தந்தையார் அவர்களுக்கு வந்தனஞ் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

ஐயா,

கடவுளுடைய திருவருளினாலும் தங்கள் ஆசீர்வாதத்தினாலும் அடியேன் இங்கே க்ஷேமமாயிருக்கிறேன். தாங்களும் அடியேனுடைய தாயார் தமையனார் முதலானவர்களும் க்ஷேமமாயிருக்கிற சமாசாரம் அறியவிரும்புகிறேன்.

அடியேன் வித்தியாசாலைக்கு நியமமாகப் போய்ப் படித்து வருகிறேன். இப்பொழுது இரண்டாம் பாலபாடமும் எண் சுவடியும் படிக்கிறேன்.

அடியேனுடைய சிறியதாயாரவர்கள் அடியேனை மிகுந்த அன்புடனே நடத்துகிறார்கள். கனம்பொருந்திய உபாத்தியாயரவர்கள் வெகு பிரீதியுடனே பாடஞ்சொல்லுகிறார்கள்.

அடியேனுக்கு இரண்டு வேட்டி வாங்கி அனுப்பும்படி தங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

அடியேனுக்கு வேண்டும் நல்ல புத்தகங்களை அடிக்கடி கட்டளையிடும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

சிதம்பரம்
அக்ஷயவருடம்
ஐப்பசிமீ ௨௯௳

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள குமாரன்
குமாரசுவாமி.

௮௭. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.

வெள்ளைக்கு—களங்கமில்லாத பரிசுத்த குணமுடையவனிடத்து, கள்ளம்—வஞ்சனை பொருந்திய, சிந்தை—நினைப்பானது, இல்லை—இல்லை.

௮௮. வேந்தன் சீறி னான்றுணை யில்லை.

வேந்தன்—அரசனானவன், சீறின்—(ஒருவனைக்) கோபித்தால், ஆம்—(அப்போது அவனுக்கு உபயோகம்) ஆகின்ற, துணை—துணை, இல்லை—(ஒருவரும்) இல்லை.

௮௯. வையந் தோறுந் தெய்வந் தொழு.

வையம் தோறும்—பூமியிலுள்ள தலந்தோறும் (போய்,) தெய்வம்—கடவுளை, தொழு—(நீ தரிசித்து) வணங்கு.

௯௦. ஒத்த விடத்து நித்திரை கொள்.

ஒத்த இடத்து—(மேடுபள்ளம் இல்லாமற்) சமமான இடத்திலே, நித்திரை கொள்—(நீ படுத்து) நித்திரை பண்ணு.

௯௧. ஓதா தார்க் கில்லை யுணர்வொடு மொழுக்கம்.

ஓதாதார்க்கு—(அறிவு நூல்களைப்) படியாதவருக்கு, உணர்வொடும்—அறிவுடனே, ஒழுக்கம்—நல்லநடையும், இல்லை—(உண்டாதல்) இல்லை.

கொன்றைவேந்தனுரை

முற்றுப்பெற்றது.

அநுபந்தம்.

கடிதம் எழுதுகிற முறை.

தகப்பனுக்கு மகன் எழுதல்.

மகா கனம்பொருந்திய தந்தையார் அவர்களுக்கு வந்தனஞ் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

ஐயா,

கடவுளுடைய திருவருளினாலும் தங்கள் ஆசீர்வாதத்தினாலும் அடியேன் இங்கே க்ஷேமமாயிருக்கிறேன். தாங்களும் அடியேனுடைய தாயார் தமையனார் முதலானவர்களும் க்ஷேமமாயிருக்கிற சமாசாரம் அறியவிரும்புகிறேன்.

அடியேன் வித்தியாசாலைக்கு நியமமாகப் போய்ப் படித்து வருகிறேன். இப்பொழுது இரண்டாம் பாலபாடமும் எண்சுவடியும் படிக்கிறேன்.

அடியேனுடைய சிறியதாயாரவர்கள் அடியேனை மிகுந்த அன்புடனே நடத்துகிறார்கள். கனம்பொருந்திய உபாத்தியாயரவர்கள் வெகு பிரீதியுடனே பாடஞ்சொல்லுகிறார்கள்.

அடியேனுக்கு இரண்டு வேட்டி வாங்கி அனுப்பும்படி தங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

அடியேனுக்கு வேண்டும் நல்ல புத்தகங்களை அடிக்கடி கட்டளையிடும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

சிதம்பரம்
அக்ஷய௵
ஐப்பசி௴ ௨௯௳

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள குமாரன்
குமாரசுவாமி.

மகனுக்குத் தகப்பன் எழுதல்.

கடவுளுடைய திருவருளினாலே சிரஞ்சீவி குமாரசுவாமிக்குக் கல்வியும் நல்லொழுக்கமும் ஈசுரபத்தியும் தீர்க்காயுசும் மேன்மேலும் பெருகுக.

என்னன்புள்ள குமாரனே,

நீ இந்தமீ ௨௯௳ எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. கடவுளுடைய பெருங்கருணையினாலே நானும் உன்னுடைய அன்புள்ள தாய் தமையன் முதலானவர்களும் க்ஷேமமாயிருக்கிறோம். உன் மாமனார் இரண்டுவாரம் சுரத்தினாலே பீடிக்கப்பட்டு, இப்போது சௌக்கியமடைந்திருக்கிறார்.

நீ வித்தியாசாலைக்கு நியமமாகப் போய், கனம்பொருந்திய உபாத்தியாயரவர்களுக்கு அன்போடும் அச்சத்தோடும் பணிந்து நடந்து, வித்தையை நன்றாகக் கற்றுக்கொள்ள வேண்டும். பின்வரும் நீதிமொழி இரண்டும் உனக்குத் தெரியுமே.

"வித்தைவிரும்பு"
"இளமையிற்கல்"

உன் தமையன் மார்கழிமீ ஆருத்திராதரிசனத்தின்பொருட்டுச் சிதம்பரத்துக்கு வருவான், உனக்கு வேட்டியிரண்டும் அவனிடத்திற் கொடுத்து அனுப்புவேன். பெற்றுக்கொள்.

நீ தினந்தோறும் தவறாமல் கடவுளை அன்போடு தியானித்துத் தோத்திரம் பண்ணக்கடவாய்.

இங்ஙனம்,
உன்வாழ்வை விரும்புகிற தந்தை
வே. வைத்தியலிங்கப்பிள்ளை.

மாயூரம்
அக்ஷய௵
ஐப்பசிமீ ௨௯௳

அநுபந்தம்.

தமையனுக்குத் தம்பி எழுதல்.

மகா கனம்பொருந்திய தமையனாரவர்களுக்கு வந்தனஞ் செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

அண்ணா,

இவ்விடத்தில் அனைவரும் க்ஷேமம். தங்கள் க்ஷேமாதிசயங்கள் அறிய விரும்புகிறேன்.

தங்கள் கட்டளைப்படி பயிர்வேலை தடையில்லாமல் நடந்து வருகின்றது. அடியேன் வித்தியாசாலைக்குத் தவறாமல் போய்ப் படித்து வருகிறேன்.

என் சிறுபிராயத்திலே பிதாமாதாக்கள் சிவபத மடைந்துவிட, தாங்களே அடியேன்மேல் இரக்கம் வைத்து, அடியேனை அன்ன வஸ்திரந்தந்து வளர்த்து, வித்தியாசாலைக்கு அனுப்பிப் படிப்பித்து வருகிறீர்கள். அடியேன் இயன்றமட்டும் கல்வியிலே தேர்ச்சியடைந்து யாதாயினும் ஒரு உத்தியோகம் பெற்றுக்கொள்ளும் வரையும், இந்த நன்றியை இடையறாவண்ணம் செய்வீர்களென்று நம்புகின்றேன். தாங்கள் செய்யும் நன்றியை அடியேன் மறவாதபடி அருள் செய்யும்பொருட்டுப் பெருங்கருணைக் கடலாகிய கடவுளைப் பிரார்த்தித்து வருகிறேன். ஔவையார் அருளிச்செய்த "நன்றி மறவேல்" என்னும் நீதிமொழி எப்போதும் என் மனசில் இருக்கின்றது.

தங்கள் தரிசனம் அடியேனுக்கு எப்போது கிடைக்குமோ அறியேன். தாங்கள் இவ்விடத்துக்குத் திரும்பும்பொழுது அடியேனுக்கு ஒரு விபூதிச்சம்புடம் வாங்கிக்கொண்டு வரும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

சிதம்பரம்
அக்ஷய௵
தைமீ ௰௨

இங்ஙனம்,
தங்கள் அதிப்பிரியனாகிய சகோதரன்
மாசிலாமணி.

அநுபந்தம்.

தம்பிக்குத் தமையன் எழுதல்.

கடவுளுடைய திருவருளினாலே சிரஞ்சீவி தம்பி மாசிலாமணிக்குச் சகல நன்மைகளும் பெருகுக.

நீ அனுப்பின கடிதம் பெற்று வாசித்துச் சந்தோஷமடைந்தேன். நான் இரண்டு வாரத்துக்குள்ளே அவ்விடம் வந்து சேருவேன். வரும்பொழுது விபூதிச்சம்புடம் கொண்டு வருவேன்.

தம்பீ, நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். நீ எவ்வளவு காலத்துக்குப் படிக்கவேண்டுமோ அவ்வளவு காலத்துக்கும் நான் உனக்கு அன்னவஸ்திரமும் புஸ்தகமுதலானவைகளும் தந்து உன்னை அன்போடு நடத்தும்படி கடவுள் கிருபை செய்வார்.

நீ படிப்பதற்கு மாத்திரமன்றிப் படித்தபடியே நடப்பதற்கும் பிரயாசைப்படவேண்டும். நன்னடை இல்லாதபோது கல்வியினாலே பிரயோசனம் இல்லை. நமக்கு உயிர்த்துணையாகிய கடவுளை ஒருபோதும் மறவாதே.

"நின்று மிருந்துங் கிடந்து நடந்துமினை
என்றுஞ் சிவன்றாளினை."

கும்பகோணம் அக்ஷய ௵ வைகாசி ௴ கஉ	இங்ஙனம், உன் அன்புள்ள தமையன் கனகசபை.

உபாத்தியாயருக்கு மாணாக்கன் எழுதல்.

ம-ா-ா-ஸ்ரீ உபாத்தியாயரவர்களுக்கு மனம் வாக்குக் காயங்களினாலே வந்தனஞ்செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

அநுபந்தம்.

கனம்பொருந்திய ஐயா,

அடியேன் இந்தமீ ௩வ தமையனாருடைய கலியாணத்தின்பொருட்டு இருபது தினத்துக்குத் தங்களிடத்திலே அநுமதி பெற்றுக்கொண்டு, அன்று சாயங்காலம் சிறிய தகப்பனாரோடும் சிதம்பரத்தினின்றும் புறப்பட்டு, ௬வ இவ்விடம் வந்து சேர்ந்தேன். ௧௨வ தமையனாருடைய கலியாணம் சிறப்பாக நிறைவேறியது.

இவ்விடத்திலே எங்கள் ஸ்ரீ குருசுவாமிகள் இந்த மாசத்துக் கடைச்சோமவாரத்திலே சிலருக்குத் தீக்ஷை செய்யும் பொருட்டு நிச்சயித்திருக்கிறார்கள். கனம் பொருந்திய இரண்டாமுபாத்தியாயரவர்கள் தம் வகுப்புப் பிள்ளைகளுக்குத் தீக்ஷை பெற்றுக்கொள்ளும்படி ஒருநாள் போதித்ததைக் கேட்டு, அடியேனும் அதில் ஆசையுடையவனாய் இருந்தேன். அதற்கு இது சமயம் ஆதலால், அடியேன் அது வரையும் தாமதித்திருந்து, தீக்ஷை பெற்று,நாலைந்து தினத்துக்குள்ளே அநுட்டானம் பழகிக்கொண்டு சிறிய தகப்பனாரவர்களோடு புறப்பட்டுத் தாமதமில்லாமல் அவ்விடம் வந்துசேருவேன். இதற்குத் தாங்கள் பொறுத்தருளி அநுமதிசெய்யும்படி தங்கள் கனத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

அடியேன் பழம்பாடம் படித்து வருகின்றேன். புதுப்பாடம் தினந்தோறும் படித்துச் சிறிய தகப்பனாரிடத்தில் ஒப்பித்து வருகிறேன்.

வேதாரணியம்	இங்ஙனம்,
அக்ஷய ஹு	தங்கள் அன்புள்ள மாணாக்கன்
கார்த்திகைமீ ௧௫வ	ச. அம்பலவாணன்.

பெருக்கல் வாய்பாடு.

1		2		3		4		5	
1	1	1	2	1	3	1	4	1	5
2	2	2	4	2	6	2	8	2	10
3	3	3	6	3	9	3	12	3	15
4	4	4	8	4	12	4	16	4	20
5	5	5	10	5	15	5	20	5	25
6	6	6	12	6	18	6	24	6	30
7	7	7	14	7	21	7	28	7	35
8	8	8	16	8	24	8	32	8	40
9	9	9	18	9	27	9	36	9	45
10	10	10	20	10	30	10	40	10	50
11	11	11	22	11	33	11	44	11	55
12	12	12	24	12	36	12	48	12	60
13	13	13	26	13	39	13	52	13	65
14	14	14	28	14	42	14	56	14	70
15	15	15	30	15	45	15	60	15	75
16	16	16	32	16	48	16	64	16	80

6		7		8		9		10	
1	6	1	7	1	8	1	9	1	10
2	12	2	14	2	16	2	18	2	20
3	18	3	21	3	24	3	27	3	30
4	24	4	28	4	32	4	36	4	40
5	30	5	35	5	40	5	45	5	50
6	36	6	42	6	48	6	54	6	60
7	42	7	49	7	56	7	63	7	70
8	48	8	56	8	64	8	72	8	80
9	54	9	63	9	72	9	81	9	90
10	60	10	70	10	80	10	90	10	100
11	66	11	77	11	88	11	99	11	110
12	72	12	84	12	96	12	108	12	120
13	78	13	91	13	104	13	117	13	130
14	84	14	98	14	112	14	126	14	140
15	90	15	105	15	120	15	135	15	150
16	96	16	112	16	128	16	144	16	160

பெருக்கல் வாய்பாடு.

11		12		13		14		15		16	
1	11	1	12	1	13	1	14	1	15	1	16
2	22	2	24	2	26	2	28	2	30	2	32
3	33	3	36	3	39	3	42	3	45	3	48
4	44	4	48	4	52	4	56	4	60	4	64
5	55	5	60	5	65	5	70	5	75	5	80
6	66	6	72	6	78	6	84	6	90	6	96
7	77	7	84	7	91	7	98	7	105	7	112
8	88	8	96	8	104	8	112	8	120	8	128
9	99	9	108	9	117	9	126	9	135	9	144
10	110	10	120	10	130	10	140	10	150	10	160
11	121	11	132	11	143	11	154	11	165	11	176
12	132	12	144	12	156	12	168	12	180	12	192
13	143	13	156	13	169	13	182	13	195	13	208
14	154	14	168	14	182	14	196	14	210	14	224
15	165	15	180	15	195	15	210	15	225	15	240
16	176	16	192	16	208	16	224	16	240	16	256

எண்மானம்.

ஒன்று	1
பத்து	21
நூறு	321
ஆயிரம்	4, 321
பதினாயிரம்	54, 321
இலக்ஷம்	6, 54, 321
பத்திலக்ஷம்	76, 54, 321
கோடி	8, 76, 54, 321
பத்துக்கோடி	28, 76, 54, 321
நூறுகோடி	328, 76, 54, 321
ஆயிரகோடி	4, 328, 76, 54, 321
பதினாயிரகோடி	54, 328, 76, 54, 321
இலக்ஷகோடி	6, 54, 328, 76, 54, 321
பத்திலக்ஷகோடி	76, 54, 328, 76, 54, 321
மகாகோடி	8, 76, 54, 328, 76, 54, 321

பின்னவெண்கள்.

ஐ	முக்கால்	$\frac{3}{4}$
ஹ	அரை	$\frac{1}{2}$
வ	கால்	$\frac{1}{4}$
௫	நாலுமா	$\frac{1}{5}$
௱—	மும்மாமுக்காணி அல்லது மூன்றுவீசம்	$\frac{3}{16}$
ய௫	மும்மா	$\frac{3}{20}$
௮ய	அரைக்கால்	$\frac{1}{8}$
ஜ	இருமா	$\frac{1}{10}$
பஜ	மாகாணி அல்லது வீசம்	$\frac{1}{16}$
ப	ஒருமா	$\frac{1}{20}$
ஆ	முக்காணி	$\frac{3}{80}$
ஈ	அரைமா	$\frac{1}{40}$
ஜ	காணி	$\frac{1}{80}$
ர	அரைக்காணி	$\frac{1}{160}$
கஅ	முந்திரி	$\frac{1}{320}$

பொன்னிலக்கம்.

வத
ஶ
ஶவத
ஐ
ஐவத
ஐஶ
ஐஶவத
சு
சுவத
சுஶ
சுஶவத
து
துவத
துஶ
துஶவத
ப
பவத
பஶ
பஶவத
பஐ
பஐவத
பஐஶ
பஐஶவத
பசு
பசுவத
பசுஶ
பசுஶவத
பது
பதுவத

பதுஶ
பதுஶவத
ஜ
ஜவத
ஜஶ
ஜஶவத
ஜஐ
ஜஐவத
ஜஐஶ
ஜஐஶவத
ஜசு
ஜசுவத
ஜசுஶ
ஜசுஶவத
ஜது
ஜதுவத
ஜதுஶ
ஜதுஶவத
ஙு
ஙுவத
ஙுஶ
ஙுஶவத
ஙுஐ
ஙுஐவத
ஙுஐஶ
ஙுஐஶவத
ஙுசு
ஙுசுவத
ஙுசுஶ

ஙுசுஶவத
ஙுது
ஙுதுவத
ஙுதுஶ
ஙுதுஶவத
ஃ
ஃவத
ஃஶ
ஃஶவத
ஃஐ
ஃஐவத
ஃஐஶ
ஃஐஶவத
ஃசு
ஃசுவத
ஃசுஶ
ஃசுஶவத
ஃது
ஃதுவத
ஃதுஶ
ஃதுஶவத
வ
வஶ
வஐ
வஐஶ
வசு
வசுஶ
வது
வதுஶ

வப
வபஶ
வபஐ
வபஐஶ
வபசு
வபசுஶ
வபது
வபதுஶ
வஜ
வஜஶ
வஜஐ
வஜஐஶ
வஜசு
வஜசுஶ
வஜது
வஜதுஶ
வஙு
வஙுஶ
வஙுஐ
வஙுஐஶ
வஙுசு
வஙுசுஶ
வஙுது
வஙுதுஶ
வஃ
வஃஶ
வஃஐ
வஃஐஶ
வஃசு

ஸ்ஸிசுமி	ஷூஜசு	ஙி—	௰௭
ஸ்ஸிதூ	ஷூஜது	ஸ	௰௮
ஸ்ஸிதூமி	ஜூகி	ஸபஜ	௰௯
ஒ	ஜூகிஜ	உஹூ	௨௰
ஒஜ	ஷூகிசு	உஙி—	௨௧
ஒசு	ஷூகிது	ஒ	௨௨
ஒது	ஷூஸி	ஒபஜ	௨௩
ஒப	ஜூஸிஜ	ஒஹூ	௨௪
ஒபஜ	ஷூஸிசு	ஒஙி—	௨௫
ஒபசு	ஷூஸிது	ஷூ	௨௬
ஒபது	க	ஷூபஜ	௨௭
ஒஜ	ப	ஜூஹூ	௨௮
ஒஜஜ	ஜ	ஜூஙி—	௨௯
ஒஜசு	கி	க	௩௰
ஒஜது	ஸி	ஸ	௩௰௧
ஒகி	ஸ	ஒ	௩௰௨
ஒகிஜ	ஸப	ஷூ	௩௰௩
ஒகிசு	ஸஜ	க	௩௰௪
ஒகிது	ஸகி	உ	௩௰௫
ஒஸி	ஸஸி	ங	௩௰௬
ஒஸிஜ	ஒ	ச	௩௰௭
ஒஸிசு	ஒப	ரு	௩௰௮
ஒஸிது	ஒஜ	சா	௩௰௯
ஜூ	ஒகி	எ	௪௰
ஷூஜ	ஒஸி	அ	௪௰௧
ஷூசு	ஷூ	கூ	௪௰௨
ஜூது	ஜூப	௰	௪௰௩
ஷூப	ஷூஜ	௰௧	௪௰௪
ஜூபஜ	ஜூகி	௰௨	௪௰௫
ஜூபசு	ஜூஸி	௰௩	௪௰௬
ஜூபது	க	௰௪	௪௰௭
ஷூஜ	பஜ	௰௫	௪௰௮
ஷூஜஜ	ஹூ	௰௬	௪௰௯

ருமீ
ருமீக
ருமீஉ
ருமீங
ருமீச
ருமீரு
ருமீசா
ருமீஎ
ருமீஅ
ருமீகூ
சாமீ
சாமீக
சாமீஉ
சாமீங
சாமீச
சாமீரு
சாமீசா
சாமீஎ
சாமீஅ
சாமீகூ
எமீ
எமீக
எமீஉ
எமீங
எமீச
எமீரு
எமீசா
எமீஎ
எமீஅ
எமீகூ
அமீ
அமீக
அமீஉ

அமீங
அமீச
அமீரு
அமீசா
அமீஎ
அமீஅ
அமீகூ
கூமீ
கூமீக
கூமீஉ
கூமீங
கூமீச
கூமீரு
கூமீசா
கூமீஎ
கூமீஅ
கூமீகூ
ா
மீ
உமீ
ஙமீ
சமீ
ருமீ
சாமீ
எமீ
அமீ
கூமீ
ா
உா
ஙா
சா
ருா
சாா

எா
அா
கூா
ஆ
ஆா
ஆஉா
ஆஙா
ஆசா
ஆருா
ஆசாா
ஆஎா
ஆஅா
ஆகூா
உஆ
உஆா
உஆஉா
உஆஙா
உஆசா
உஆருா
உஆசாா
உஆஎா
உஆஅா
உஆகூா
ஙஆ
ஙஆா
ஙஆஉா
ஙஆஙா
ஙஆசா
ஙஆருா
ஙஆசாா
ஙஆஎா
ஙஆஅா
ஙஆகூா

சஆ
சஆா
சஆஉா
சஆஙா
சஆசா
சஆருா
சஆசாா
சஆஎா
சஆஅா
சஆகூா
ருஆ
ருஆா
ருஆஉா
ருஆஙா
ருஆசா
ருஆருா
ருஆசாா
ருஆஎா
ருஆஅா
ருஆகூா
சாஆ
சாஆா
சாஆஉா
சாஆஙா
சாஆசா
சாஆருா
சாஆசாா
சாஆஎா
சாஆஅா
சாஆகூா
எஆ
எஆா
எஆஉா